# தீபகச் சுடர்

TO SHARE THE LIGHT

செப் 2025

தீபம் 14 சுடர் 04

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



அன்புள்ள புனித ஆரோக்கிய அன்னையின் தீபக சுடர் வாசக அன்பர்களே.

## புனித கன்னி மரியாள்

### உலகிற்கும், திருஅவைக்கும் கடவுள் தந்த பரிசு

இந்த மாதம் திருஅவை மகிழ்ச்சியுடன் புனித கன்னி மரியாளின் பிறப்புத் திருநாளை கொண்டாடுகின்றது. திருஅவை சட்டம் மரியாளின் வாழ்க்கை, இறைவனின் மீட்புத் திட்டத்தோடு ஆழமாக இணைக்கப்பட்டிருப்பதை நினைவூட்டுகிறது. அவர்களின் பிறப்பு நம்பிக்கையின் விடியலாகும். ஏனெனில் அவர்களிடம் இருந்து உலகின் ஒளியான கிறிஸ்து (யோவான் 8:12) பிறந்தார். மரியாவின் பிறப்பை நாம் போற்றும் இந்நாளில் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கான மூன்று அம்சங்களை சிந்திப்போம்.

### 1. நம்பிக்கையிலும் கீழ்ப்படிதலிலும் முன்னுதாரணம் மரியாள்

"இதோ ஆண்டவரின் அடிமை நான்" (லூக்.1:38) என்ற மரியாளின் "ஆம்" என்பது செயற்பாடான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது. இறைவனின் திட்டம் மறைவாக இருந்தாலும், முழுமையான நம்பிக்கையுடன் தன்னையே ஒப்படைத்தாள். நமது குடும்பங்களிலும், பள்ளிகளிலும், பணியிடங்களிலும் உண்மைக்கும், நீதிக்கும், அன்பிற்கும் நாமும் அன்றாடம் "ஆம்" என்று சொல்ல அழைக்கப்பட்டிருக்கிறோம்.

### 2. கேட்டு, பரிந்துரைத்து இணையும் அன்னை மரியாள்

கானாவூர் திருமணத்தில், பிறரின் தேவையை முதலில் உணர்ந்து மகனிடத்தில் எடுத்துரைத்தவர் அன்னை மரியாள்(யோவான் 2:1-11). அவளது அக்கறை நம்மைச் சுற்றியுள்ள ஏழைகள், இளைஞர்கள், தனிமையில் இருப்போர் ஆகியோரின் துயரங்களை கேட்டு, கருணையுடன் பதிலளிக்க தூண்டுகிறது. கற்றுத்தரலும் கேட்பதிலிருந்து தான் தொடங்க வேண்டும். அப்போது தான் ஆண்டவருடைய வார்த்தை மனிதர்களின் உண்மையான தேவைகளைத் நிறைவேற்றும்.

### 3. ஆனந்தத்திலும் பணி உற்சாகத்திலும் செயல்பட்ட மரியாள்

கபிரியேல் தூதர் மரியாளுக்கு பிறப்புச் செய்தியை அறிவித்தப் பின் மரியா "விரைவாக புறப்பட்டு" எலிசபெத்தைச் சந்திக்கின்றாள்.(லூக். 1:39) உண்மையான சீடத்துவம் பணி மனப்பான்மையைத் தருகிறது. நம்பிக்கை உள்ளத்தில் மட்டும் அடைக்கப்பட்டிருக்காமல், பிறருக்கு சேவையாய் வெளிப்பட வேண்டும். மரியாளைப் போல நாமும் மகிழ்ச்சியோடு கிறிஸ்துவைச் சேர்த்து வார்த்தைகளாலும், செயல்களாலும், வாழ்வின் சாட்சியாலும் பிறருக்குக் கொண்டு செல்லுவோம்.

மரியாளின் பிறப்பை கொண்டாடும் இந்நாளில் அவளின் நம்பிக்கை நம்மை ஊக்குவிக்க அவளின் பரிந்துரை நம் கற்றுத்தரலை வழிநடத்த, அவளின் பணி உற்சாகம் நம் திருப்பணியைத் தீப்பற்றச் செய்யட்டும். அவளின் வழிநடத்துதலால், நம் குடும்பங்கள், பங்குகள், பள்ளிகளில் கிறிஸ்துவின் ஒளியைத் தொடர்ந்து ஒளிரச் செய்வோம்.

**மரியாளின் பிறந்த நாள்,**
**"நம்பிக்கையின் விடியல்"**
**"அவளின் பரிந்துரை நம் கற்றுத்தரலை வழிநடத்துகிறது."**
**"அவளின் பணி உற்சாகம் நம் வாழ்வைச் சாட்சியமாக்குகிறது."**

அன்னை மரியாளின் பரிந்துரை செபம் நம்மை வழிநடத்தட்டும்.
அவரின் தழ்ச்சி நமக்கு வழிகாட்டட்டும்.

என்றும் அன்புடன்
அருட்பணி. **ஜேசுதாஸ்** ச.ச
இயக்குநர் - தீபகம்

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 03.09.2025 | புனித பெரிய கிரகோரி | 05 |
| 06.09.2025 | கொல்கொத்தா நகர் புனித தெரசா | 06 |
| 07.09.2025 | பொதுக்காலம் 23ம் ஞாயிறு | 07 |
| 08.09.2025 | தூய கன்னி மரியாவின் பிறப்பு பெருவிழா | 09 |
| 13.09.2025 | புனித யோவான் கிறிசோஸ்தோம் | 10 |
| 14.09.2025 | திருச்சிலுவையின் மாட்சி விழா | 11 |
| 15.09.2025 | தூய மரியாவின் துயரங்கள் (வியாகுல அன்னை) | 12 |
| 17.09.2025 | புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர் | 14 |
| 21.09.2025 | பொதுக்காலம் 24ம் ஞாயிறு | 15 |
| 22.09.2025 | அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் நண்பர்கள் | 17 |
| 27.09.2025 | புனித வின்சென்ட் தே பால் | 18 |
| 28.09.2025 | பொதுக்காலம் 26ம் ஞாயிறு | 19 |
| 29.09.2025 | தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் விழா | 21 |
| 30.09.2025 | புனித எரோணிமுஸ் (ஜெரோம்) திருவிழா | 22 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| அருள்மிகப் பெற்றவளே வாழ்க | 25 |
| ஆசிரியர் தினத்தில் விழாக்காணும் புனித அன்னை தெரேசா | 28 |
| அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது நண்பர்கள் | 31 |
| திருஅவைச் செய்திகள் | 34 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# புனித பெரிய கிரகோரி

திருப்பலி
03.09.2025

## முன்னுரை

*திருமதி. ராணிவில்சன்*

இறையேசுவில் பிரியமுள்ள இறைமக்களே, புனித பெரிய கிரகோரியாரின் நினைவு விழா திருப்பலியில் பங்கேற்று ஆசீர்பெற வந்திருக்கும் நாம் அனைவரும் பேறுபெற்றவர்கள். காரணம், நம்பிக்கையின் மக்களாக இன்றுவரை நாம் நிலைத்திருக்கச் செய்தது இவர் கொண்டுவந்த வழிபாட்டு முறையும் திருஅவையின் கொள்கைக்கு இவர் இட்ட அடித்தளமுமே ஆகும். இளம் வயதிலேயே பல சாதனைகளைச் செய்தவர். தனது 30வது வயதில் உரோமை நகர் காவலர் என்ற பெரிய பதவியை 5 ஆண்டுகாலம் வகித்தார். சிசிரியில் பல இடங்களில் 6 துறவற மடங்களை நிறுவினார். இவர் உரோமையில் ஆசீர்வாதப்பர் சபைத் துறவியானார். குருவான பின் கீழ்த்திருஅவையின் கான்ஸ்டன்டைன் நோபிளில் தங்கி திருத்தந்தையின் தூதுவராகப் பணியாற்றினார். நாளடைவில் மீண்டும் உரோமைக்கு அழைக்கப்பட்டு மடாதிபதியாகவும் தனது 50 வயதில் திருத்தந்தையாகவும் உயர்த்தப்பட்டார். நேர்மையானவர், தகுதியில்லா அருட்பணியாளர்களை பணியிலிருந்து நீக்கினார். சிறைப்பட்டவர்களை மீட்டார். இதற்காக திருத்தந்தையின் கருவூலத்திலிருந்து பணம் நிறைய செலவிட்டார்.

எல்லாவற்றிற்கும் மேலாக தான் திருத்தந்தையாகப் பணிபுரியும்போது தாழ்ச்சியுடன் பணிபுரிவதை விரும்பியவர். அதன் அடையாளமாக தனது மடல்களில் "இறைவனின் ஊழியர்களிளெல்லாம் கடை ஊழியன்" என இணைத்து கையெழுத்து இடுவார். இம்முறை இன்றுவரை அனைத்து திருத்தந்தையர்களாலும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்றைய வாசகமும் நற்செய்தியும் நமக்கு அறிவுறுத்துவதும் இதுவே. இறைத்திட்டமும், இறைவன் வருகையும் நாம் அறிந்திருந்தாலும், அவரின் வருகை எப்போது எப்படி என நமக்குத் தெரியாது. ஆனால் ஒளியின் மக்களாக விழிப்போடும் அறிவுத் தெளிவோடும், வல்லமையோடும் பெற்ற கொடைகளுக்கு ஏற்ப எல்லாவற்றிற்கும் மேலாக பணிவோடும், நம் மீட்புக்காக மட்டுமன்று அனைவரின் விடுதலைக்காகவும் இப்புனிதரைப்போல நேர்மையாக, உண்மையாக வாழ இன்று உறுதியேற்று இத்திருப்பலி வழியாக நாம் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் ஊழியர்களாகிய எம் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவிகள் அனைவரும் புனித பெரிய கிரகோரியார்போல நேர்மையுடன் திருஅவையின் நலனுக்காகவும், உலகிற்கு எடுத்துக்காட்டாகத் திகழவும், உழைக்கவும் வேண்டிய வல்லமையைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பு இறைவா, திருஅவையும் இச்சமூகமும் மறுமலர்ச்சி பெற்று அன்பும், அமைதியும், ஒற்றுமையும், சமாதானமும், மகிழ்வும் கொண்டவர்களாக மாறி, மக்கள் அனைவரும் நலமோடு வாழ பெரிய கிரகோரியாரின் வல்லமையுள்ள மன்றாட்டால் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உம் தியாகத்தினால் எங்களை மீட்ட தந்தையே, அன்னை மரியாள் தன் தியாக வாழ்வின் மூலம் தன் வாழ்வை காத்துக்கொண்டதுபோல, பிறரன்புப் பணி செய்து நாங்களும் எங்கள் வாழ்வை காத்துக்கொள்ளும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



## கொல்கொத்தா நகர் **புனித தெரசா** மற்றும் **ஆசிரியர் தினவிழா**

**திருப்பலி**
**05.09.2025**

### முன்னுரை

*திரு. விக்டர்*

செப்டம்பர் 5ம் தேதியில் ஆசிரியர் தினவிழாவைச் சிறப்பிக்கும் நாம், இந்நாளில் ஆசிரியராய் பணியாற்றி அருள் வாழ்வில் தன்னை இணைத்துக்கொண்ட புனித அன்னை தெரசாவின் திருவிழாவையும் சிறப்பிக்கின்றோம். “உன்மீது நீ அன்பு கூறுவதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக” (மத் 22: 39) என்ற ஆண்டவர் இயேசுவின் அமுத மொழிக்கிணங்க வாழ்ந்துச் சென்றவர் புனித அன்னை தெரசா. கொல்கொத்தா நகரில் அவர் பார்த்த ஏழை மக்களின் கடின வாழ்வு, அனாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வு, கைவிடப்பட்ட நோயாளிகளின் நிலை அவரை வெகுவாகப் பாதித்தன. 1950ல் அன்பின் பணியாளர் (ஆைளளைையெசநைள ழுக ஊாயசவைல) என்கிற கத்தோலிக்க துறவற சபையை நிறுவினார். இச்சபையினர் சமுதாயத்தில் கைவிடப்பட்ட அநாதைக் குழந்தைகள், நோயினால் புறக்கணிக்கப்பட்ட முதியவர்கள், எயிட்ஸ் மற்றும் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இறப்பின் விளிம்பில் இருப்பவர்கள், மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் இப்படி பல்வேறுபட்ட மக்களுக்கும் இலவசமாக அன்புடன் பணிசெய்து வந்தார்.

1979ல் உலக அமைதிக்கான நோபல் பரிசு அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. இந்தியாவின் மிக உயரிய விருதான “பாரத ரத்னா” விருது 1980ல் அன்னை தெரசாவுக்கு வழங்கப்பட்டது. இது மட்டுமல்லாமல் பல்வேறு சர்வதேச விருதுகளையும் அவர் பெற்றார். உலக மக்களால் “அன்னை தெரசாள்” (ஆழவாநச வூநசநளய) என்று அன்பாய் போற்றப்பட்ட அன்னை தெரசாள் 1997ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ம் தேதி இறைவனோடு இணைந்தார். அவரது உடல் அரசுமுறைப்படி இறுதி மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை தெரசாளுக்கு 2016ம் ஆண்டு செப்டம்பர் 4ம் தேதி புனிதர் பட்டமளித்து சிறப்பித்தார். அன்னையின் வாழ்வு நமக்குப் பாடமாக அமையட்டும். அன்பு ஆண்டவரின் அருட்பணியில் நம்மை இணைத்துக்கொண்டு, நம்மிலும்

எளியவருக்கு, நம்மாலான உதவிகளைச் செய்து, ஆண்டவர் பெயரை மகிமைப்படுத்துவோம். இதற்கான வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எம்மை அதிகமாய் அன்பு செய்யும் இறைவா, இவ்வுலகில் உமது மக்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காகச் செபிக்கின்றோம். இவர்கள் உமது தூய ஆவியாரால் நிரப்பப்பட்டு, திடப்படுத்தப்படவும், பலப்படுத்தப்படவும் வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இறையன்பில் எம்மை வழிநடத்தும் இறைவா, புனித அன்னை தெரசாளை உமது சாட்சியாக இவ்வுலகில் வாழச்செய்து எமக்கெல்லாம் மாதிரி காட்டினீரே, ஏழை எளியவர் மட்டில் அன்னை கொண்டிருந்த அன்பும், அவர்களுக்குப் பணி செய்ய வேண்டுமென்ற விருப்பமும் எம்மிலும் வளர்ந்து பெருகவேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் வழிகாட்டியே எம் இறைவா, ஆசிரியர் பணிசெய்யும் ஒவ்வொருவரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். தங்களின் பணி உலகப்பொருட்களை சம்பாதிக்கும் பணியல்ல, இறைவனின் செல்வத்தை சேர்க்கும் பணி என்பதை உணர்ந்து, தாராள சேவை மனதுடன் தங்களிடம் வரும் பிள்ளைகளுக்கு கல்வி கற்க உதவி புரியும் மனதைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
4. இயற்கையைப் படைத்து பாதுகாக்கும் இறைவா, ஒருவார்த்தையால் இவ்வுலகையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினீர். நீர் உத்தரவிட காற்று நின்றது, கடலும் கீழ்ப்படிந்தது. இந்நாட்களில் வன்முறைகள் நிறைந்து, பகைஉணர்வு அதிகரித்திருக்கும் எமது நாட்டில் உமது கருணையினால் ஒன்றுப்பட்டவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 23வது ஞாயிறு

திருப்பலி
07.09.2025

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *சா ஞா. 9:13-18* II. *பில. 9-10, 12-17* *லூக். 14:25-33*

இறைவனின் அன்பைப் பெற்ற மக்களாக அன்பை வாழ்வாக்க அழைக்கப்பட்டிருக்கின்ற இறை நம்பிக்கையாளர்களே, இன்றைய முதல் வாசகத்தில் ஞானம் என்பது அறிவு ஆகாது, அறிவைவிட மிகத்தெளிவாகக் கொண்டிருப்பது தான் ஞானம். ஞானம் ஒன்றினால் மட்டுமே இறைவனை நாம் அடைய முடியும் என்பதைக் காண்கிறோம். இரண்டாம் வாசகத்தில் புனித பவுலுக்கும் கிறிஸ்தவ நெறியை பின்பற்றும் மக்களுக்கும் உள்ள அன்புறவு

சற்று மேலானது என்பதை விளக்குகின்றது. இதில் கிறிஸ்தவர்களுக்கு இருக்க வேண்டிய முக்கிய குணம் அன்பு என்பதை விளக்குகிறார் பவுல். கிறிஸ்தவ அன்பு ஒருவரையொருவர் இணைக்கும் பாலமாக இருக்க வேண்டும். இறைவன் முன்னிலையில் நாம் அனைவரும் சமம் என்பதை எடுத்துக்காட்டுவது அன்பே என்று கூறுகின்றார்.

நற்செய்தியில், இயேசுவின் சீடத்துவம் ஒரு விலைமதிப்பற்ற தியாகமாகவும், உறவாகவும் கருதப்படுகின்றது. அது திருமண உறவாயிருந்தாலும், இயேசுவுக்காக, இயேசுவின் பணியில் பின்பற்ற வேண்டும். இயேசுவே எல்லாம் என்று வாழும் சீடரின் வாழ்வில் மனைவி கூடத்தடங்கலாய் வரக்கூடாது என்று கூறுகிறார். நாம் இயேசு வாழ்ந்ததைப்போல் "நாம் எல்லாருக்குமான" என்று வாழ வேண்டும் என்கிறார். அன்னை தெரேசா தன் தேசத்தைவிட்டு, குடும்பத்தை விட்டு, இந்திய தேசத்தில் வந்து எல்லாருக்கும் தாயாக திகழ்ந்தார்கள். அந்த தியாக வாழ்வு வாழ, இயேசுவின் சிலுவையை சுமந்து அவரைப் பின்பற்ற வேண்டும். இயேசுவை பின்பற்றும் சீடத்துவ வாழ்வு எளிதானதல்ல, துன்பங்கள் நிறைந்த வாழ்வு. இறைவனுக்காக இவ்வுலக வாழ்வின் பற்றுதல்களை இழந்து பிறரை அன்பு செய்ய, தியாக வாழ்வு வாழ அந்த அன்பு வாழ்வின் மூலம் உலக ஆசையை வெறுத்துத் தள்ள முடியும். அந்த அன்பு வாழ்வினை நாமும் பெற்றிட இத்திருப்பலியில் இறைவனைக் காண்போம். வாருங்கள், திருப்பலியில் பக்தியுடன் பங்கு பெறுங்கள்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, உம் பணிக்காய் நீர் தேர்ந்தெடுத்து அருட்பொழிவு செய்துள்ள எம் திருத்தந்தை ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், துறவறத்தார் அனைவரும் தங்கள் பணி வாழ்வில் உமதன்பு வாழ்வை, வார்த்தையாக இல்லாமல் வாழ்வாக பிரதிபலித்து, சாட்சிய வாழ்வு வாழ்ந்து மக்களை நல்வழியில் வழிநடத்திச்செல்ல தூய ஆவியின் வல்லமை அவர்கள்மேல் பொழியப்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.
2. அரணும் கோட்டையுமான இறைவா, எங்கள் வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், சோதனைகளைக் கண்டு மனம் சோர்ந்து, தளர்ந்து வாழ்வை முடித்துக் கொள்ளும் கோழைத்தனமான முடிவுகளை எங்கள் மனதிலிருந்து அகற்றி, நீர் எங்களோடு இந்த யூபிலி ஆண்டில் பயணிக்க வேண்டுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.
3. வாழ்வு வழங்குபவரே இறைவா, திருமணமாகி பல ஆண்டுகள் கடந்து, குழந்தை செல்வத்திற்காக ஏங்கித் தவிக்கும் தம்பதியரின் வேண்டுதல்களைக் கண்ணோக்கிப் பாரும். அவர்களின் கண்ணீரை, அவமானத்தைப் போக்கி அவர்களுக்கு நல்ல மக்கட்பேற்றினை அளித்து மகிழ்ச்சியான வாழ்வு நடத்த வரமருள ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றாகிய இறைவா, எம் இளைஞர்கள் அறிவை மட்டும் நம்பியிராமல் அறிவைக் கடந்த ஞானத்தைப் பெற்று தங்களுடைய வாழ்வில் அவர்கள் சந்திக்கும் சவால்களை எதிர்நோக்கி ஊடகத்தின் மூலம் இறைவார்த்தையின் ஒளியைப்பெற்று ஒளியின் மக்களாக வாழ வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

# தூய கன்னிமரியாவின் பிறப்பு பெருவிழா

திருப்பலி
08.09.2025

## முன்னுரை

*திரு. ஜான் சுரேஷ்*

இறையேசுவில் பிரியமானவர்களே, இன்று நமது தாய்த் திருஅவை கன்னிமரியாளின் பிறப்பு விழாவையும், ஆரோக்கிய அன்னையின் விழாவையும் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறது. நமது தாய் அன்னைமரி இஸ்ரேல் நாட்டில் யூத குலத்தில் சுவக்கின், அன்னாள் என்ற பெற்றோர்க்கு அருந்தவப் புதல்வியாகப் பிறந்தார். அன்னை மரியாவின் பிறப்பு பிதாவாகிய தந்தையினால் முன்பே குறிக்கப்பட்டது. நமது ஆதி பெற்றோர் ஆதாமும், ஏவாளும் சாத்தானின் தந்திரத்தால் சிங்கார வனத்தினின்று வெளியேற்றப்பட்டபோது சாத்தானுக்கு தண்டனைக் கொடுப்பதற்காக பிதாவாகிய தந்தை தீர்ப்பாக, வாக்குறுதியாகக் கூறியது. "உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவோம். அவள் வித்து உன் தலையை காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய்" (தொநூ. 3:15). இதன்மூலம் மாதாவை அப்போதே முன் குறித்துவிட்டார் என்பது புலனாகிறது. இதிலிருந்து அன்னைமரியா தெய்வ பயமும், தெய்வ அருளும், தாழ்ச்சியும் பெற்றவராகத் திகழ்ந்தார் என்பது உண்மை. ஆண்டவரின் சித்தத்தை ஏற்று கன்னிமை இழக்காமலே தூய ஆவியின் அருளால் நம் மீட்பர் இயேசுவைக் கருத்தாங்கினார். இத்தகு அன்னையை ஆண்டவர் இயேசு நமக்கு அன்னையாகக் கொடுத்ததை நினைத்து நன்றி உள்ளத்தோடு இத்திருப்பலியில் பங்கேற்போம். அன்னையின் இரக்கத்தை நிறைவாகப் பெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, அன்புக்கு இலக்கணமாக வாழ்ந்த எம் தாய் அன்னை மரியாளைப்போல் திருச்சபையை வழிநடத்தும் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் உம் அன்னையைப்போன்று உலகினை அன்பினால் கட்டியெழுப்பி எங்கும் அன்பைப் பரப்பும் உள்ளங்களாகத் திகழ வரமருள எமது அன்னையின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. தாழ்ச்சி என்னும் பாடத்தைக் கற்றுத்தரும் எம் இறைவா, தாழ்ச்சிக்கே உதாரணமாக விளங்கிய எம் அன்னை மரியாளைப்போல், எம் நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரும் "பணிபெற அன்று, பணிபுரியவே"

என்னும் தாரக மந்திரத்தைத் தமதாக்கிக் கொண்டு, நாட்டை நல்ல முறையில் நடத்திச் செல்ல வரமருள வேண்டுமென்று எமது அன்னை மரியின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, எம் பங்கிலுள்ள நோயாளிகளை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். ஆரோக்கிய அன்னையின் பரிந்துரையால் தீராத நோய்களிலிருந்தும், தொற்று நோய்களிலிருந்தும், உயிர்க்கொல்லி நோய்களிலிருந்தும், நாட்டு மக்களையும், பங்கு மக்களையும் பாதுக்காத்து குணமளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித யோவான் கிறிசோஸ்தோம்

திருப்பலி
13.09.2025

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

கிறிஸ்து இயேசுவில் அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது புனித யோவான் கிறிசோஸ்தோம் என்பவரின் விழாவைக் கொண்டாட அன்புடன் அழைக்கிறது. இந்தப் புனிதர் 349ம் ஆண்டு அந்தியோக்கியாவில் பிறந்தார். "கிறிசோஸ்தோம்" என்றால், "பொன்வாய்" என்பது பொருள். இவர் சிறந்த மறையுரையாளர். இந்தப் புனிதர் சொற்பொழிவாளர்களின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார். புனித அந்தியோக்கியா நகர மெலிசியுஸ் கையால் 381ம் ஆண்டு திருத்தொண்டராகவும் 386ம் ஆண்டு இராஜிரியுஸ் கரங்களால் அருள்பணியாளராகவும் திருநிலைப் பெற்றார். கொன்ஸ்தாந்திநோபிள் பேராயராக 397ம் ஆண்டு இவர் நியமிக்கப்பட்டார். யோவான் பேராயராக வந்ததை விரும்பாத அலெக்சாந்திரியா நகர மறைத்தந்தை தியோ/பிலஸ் "இறையியல் வல்லுநர் ஓரிஜனுக்கு பேராயர் சலுகைக் காட்டுகிறார்" என்று குற்றம் சாட்டி இப்புனிதரை நாடு கடத்தினர். யோவானுக்கு ஆதரவாக மக்கள் கிளர்ச்சி செய்ததால் 403ம் ஆண்டு திரும்ப அழைத்து வரப்பட்டார். மீண்டுமாக இவர்மீது குற்றம் சாட்டி நாடு கடத்தினர். நீண்ட வழிப்பயணத்தில் இறந்து விடுவார் என்று எதிரிகள் நினைத்தார்கள். அந்த நாட்டில் மூன்று ஆண்டுகள் இருந்தபோது 250 கடிதங்கள் எழுதி விசுவாசிகளைத் திடப்படுத்தினார். நடந்த அனைத்தையும் விளக்கி திருத்தந்தை முதலாம் இன்னொசென்ட்டிற்குக் கடிதம் எழுதினார். "பேராயர் பொறுப்பு நீக்கப்பட்டது செல்லாது" என்று திருத்தந்தை அறிவித்தார். 407ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14ம் தேதி புனிதர் இறந்தார். துன்பங்களைத் தாங்கக்கூடிய மனப்பக்குவத்தை புனிதர் வழியாக இறைவனிடம் மன்றாடி திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. சாந்தமுள்ளோர் பேறுபெற்றோர் என்ற இயேசுவே, திருஅவையின் தலைவரான எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் தாழ்ச்சியையும் சாந்த குணத்தையும்

கொண்டவர்களாக இப்புனிதரின் வழியில் நடக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியின் அரசரே இறைவா, உலகிலுள்ள தலைவர்கள், ஆட்சியாளர்கள் தங்களுடைய பாதுகாப்பில் உள்ள மக்களை அமைதி வழியில் நடத்திச்செல்ல வேண்டுமென்றும், நாடுகளுக்கிடையே போர், கலவரம் ஏற்படாமல் ஒற்றுமையுடன் சகோதர அன்பில் நிலைத்திட வரமருள வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.

3. நீங்கள் அனைவரும் சகோதரர்கள் என்றவரே, மிகச்சிறியோராகிய என் சகோதரர், சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்யும் உதவிகள் எனக்கேச் செய்யப்பட்டதாகும் என்று சொன்ன உம் வார்த்தைகளை வாழ்வாக்கி, நாங்கள் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# திருச்சிலுவையின் மாட்சி விழா

**திருப்பலி**
**14.09.2025**

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *எண். 21: 4-9* II. *பிலி. 2: 6-11* *யோவான் 3: 13-17*

கிறிஸ்து இயேசுவின் இனிய இறைகுலமே, இன்றைய தினம் நம் ஆண்டவரின் திருச்சிலுவையின் மகத்துவ நாளாகச் சிறப்பிக்கின்றோம். சிலுவை என்பது அவமானத்தின் சின்னமாக தோல்வியின் அடையாளமாக இருந்தது. இயேசு அதனை வெற்றியின் சின்னமாக மாட்சியின் அடையாளமாக மாற்றினார். எழுந்தது முதல் இரவு தூங்க செல்லும்வரை அனைத்து நிகழ்வுகளுக்கும் கடவுளுக்கு நன்றி கூறிக்கொண்டே, சிலுவை அடையாளம் நெற்றியில் வரைந்துக் கொள்கிறோம், வரைந்துக்கொள்ள வேண்டும்.

சிலுவை இயேசுவின் கீழ்ப்படிதலைக் குறிக்கின்றது. சிலுவையில் தன்னுயிர் போகுமளவிற்கு இயேசு கீழ்ப்படிந்தார். அவரின் கீழ்ப்படிதலை நம் வாழ்வில் இறைவனுக்கும், பெரியவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், திருஅவைக்கும் ஏற்றவர்களாக நடக்கின்றோமா? நம் வாழ்வில் நமக்கு வரும் அனைத்து விதமான கஷ்டங்களையும் நாம் இயேசுவைப்போல் ஏற்றுக்கொண்டால் நாமும் அவரது மாட்சியில் பங்கு கொள்வோம். யோவான் நற்செய்தியில் கூறப்பட்டதுபோன்று இறைவன் இந்த அழகான உலகத்தையும், நமக்குத் தேவையான அனைத்தையும் படைத்து நாம் அவரில் ஒன்றித்து வாழ விட்டுச்சென்றார். காரணம், அவர் நம்மீதுக்கொண்ட அளவிட முடியாத நம்பிக்கை, அன்பும் வைத்து, தம் ஒரே மகனையே பலியின் வழியாக நமக்கு மீட்பைப் பெற்றுத்தந்தார். அவமானச் சின்னமான சிலுவை, அன்பின் அடையாளமாக, வாழ்வளிக்கும் ஊற்றாக மாறியது.

நான்காம் நூற்றாண்டில் அலெக்சாண்டிரியன் குறிப்பேடு கூறுவது, கான்ஸ்டான்டைன் தாயான ஹெலன் அரசி ஆண்டவரின் திருச்சிலுவையை

14 செப்டம்பர், 320 அன்று கண்டுபிடித்தார். அதன்பின் 13செப்டம்பர், 335 அன்று திருச்சிலுவையின் ஆலயமும், எருசலேமிலுள்ள கொல்கத்தா என்னுமிடத்தில் அர்ச்சிக்கப்பட்டது. பக்தி முயற்சிக்காக வணக்கம் செய்யப்பட்டு பின்பு ஒரு விழாவாக மாறியது. பாவம் மற்றும் சாத்தானின்மீது கிறிஸ்து கொண்ட வெற்றியைக் குறிப்பதற்கு பயன்படும் ஒரு கருவியாக சிலுவை இருக்கின்றது என்ற உணர்வோடு, நம்முடைய வாழ்வில் ஏற்படும் அனைத்து நிகழ்வுகளையும் ஏற்று வாழ்வில் மீட்படைய வேண்டிய இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் நாயகரே எம் இறைவா, திருஅவையை வழிநடத்திவரும் அனைத்து தலைவர்களையும், உடனுழைப்பாளர்களையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் பணிவாழ்வில் ஏற்படும் அனைத்து இடர்பாடுகளையும் நீரே இவர்களுக்குத் துணையாக இருந்து, வெற்றியோடு செயல்பட உமதாற்றலையும், வல்லமையையும், தூய ஆவியாரின் அருட்கொடைகளை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நல்லாயனே எம் தலைவா, நாட்டையாளும் அரசியல் தலைவர்களும் மற்ற துறையினைச் சார்ந்தவர்களும் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படவும், தன்னலமற்ற, பரந்த மனப்பான்மைக் கொண்டவர்களாக செயல்பட்டு மக்களை நல்வழியில் நடத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பின் அருட்சுடரே எம் இறைவா, இன்றைய காலச்சூழலில் அன்பின்றி தவிப்போரை நீரே அன்பராய், நண்பராய், உற்றத் துணையாளராய் நின்று உலகிலும், நாட்டிலும், குடும்பங்களிலும் ஒருவரையொருவர் மதித்து அன்பு செய்து பிறரோடு ஒற்றுமையாக வாழும் பரந்த மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# தூய மரியாவின் துயரங்கள் (வியாகுல அன்னை)

திருப்பலி
15.09.2025

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

"உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப்பாயும்" (லூக் 2:35)

கிறிஸ்துவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருச்சபை வியாகுல மாதா விழாவைக் கொண்டாட அழைப்பு விடுக்கின்றது. 12ம் நூற்றாண்டு முதலாகவே, வியாகுல மாதா மீதான பக்தி, மக்களின் உள்ளத்தில் வளர ஆரம்பித்தது. இவ்வணக்கம் சிஸ்டர்சியான் மற்றும் வியாகுல மாதா அதாவது இன்றைய "மரியின் ஊழியர் சபை"யினரால் கொண்டாடப்பட்டது. 14,15ம் நூற்றாண்டிலிருந்து உலகம் முழுவதும்

கொண்டாடப்பட்டது. அன்னையின் இதயத்தை ஊடுருவிய ஏழு வாள்கள் இந்த வியாகுலத்தின் பொருளை எடுத்துக்காட்டுகின்றன.

**சிமியோன் இறைவாக்கு:** உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப்பாயும் (லூக் 2:35). எகிப்துக்கு ஓடிப்போனது (மத் 3:14). காணாமல் போன இயேசுவை மூன்று நாட்களாகத் தேடியது (லூக் 2:46). கல்வாரிக்குச் சிலுவைச் சுமந்துப் போன இயேசுவை வழியில் சந்தித்தது. அன்னை மரியா சிலுவை அடியில் நின்றது (யோவா 19:25). இயேசுவை சிலுவையில் இருந்து இறக்கி மடியில் வைத்தது. இயேசுவை அடக்கம் செய்தது (யோவா 20:42). இன்று நம் தாய் திருச்சபையில் நடக்கும் வியாகுலங்கள் ஏராளம். திருச்சபையில் நிலவும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகள், பங்குத்தளங்களில் நிகழும் அவலங்கள், குழந்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படும் துன்பங்களால் வரும் வியாகுலம், இவையனைத்தையும் நம் வியாகுல அன்னையிடம் சமர்ப்பிப்போம். தனது வாழ்வில் சந்தித்த வியாகுலங்களை அன்னைமரியாள் பரந்த உள்ளத்தோடும், தியாக மனதோடும் ஏற்றுக்கொண்டதுபோல, நாமும் சமுதாய அவலங்களிலிருந்து மீண்டு வர மனதைரியத்தையும், உறுதியையும், ஆழ்ந்த விசுவாசத்தையும் பெற வியாகுல அன்னையின் வழியாகப் பரிந்துப் பேசும்படி இத்திருப்பலியில் செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்புத் தந்தையே இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், துறவறத்தார் அனைவரும் அன்னையின் வியாகுலங்களைச் சிந்தித்து இந்த சமுதாயத்தில் சந்தித்துவரும் சவால்களையும், துன்பங்களையும் வியாகுல அன்னையின் பரிந்துரையால் வெற்றிக்காண வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. மக்கள் நலங்காக்கும் மன்னவனே இறைவா, எம் இந்திய நாட்டில் மதச்சுதந்திரம், மனித நேயம், மனித உரிமைகள் காக்கப்பட வியாகுல அன்னையின் பரிந்துரையால் இங்குள்ள அனைத்து மக்களும் காக்கப்பட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அனைவருக்கும் தந்தையான அன்பு இறைவா, உலகில் 5-14 வயதுக்கு இடைப்பட்ட சிறார்கள், ஏறத்தாழ 15 கோடி பேர் குழந்தைத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். வியாகுல அன்னையின் பரிந்துரையால் இந்நிலை மாறி அனைவரும் இறைவனின் குழந்தைகள் என்ற எண்ணத்தை அவர்களுக்குத் தந்து அக்குழந்தைகள் புதுவாழ்வு பெற்று வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் இறைவா, எம் நாட்டிலுள்ள பெண்களுக்காக மன்றாடுகிறோம். குடிக்கின்ற கணவன்மார்களால் வருகின்ற துயரங்கள், கீழ்ப்படியாத பிள்ளைகளால் படுகின்ற துயரங்கள், வறுமையினால் ஏற்படுகின்ற துயரங்கள் என்று எம் பெண்கள் சந்திக்கின்ற துயரங்களை வியாகுல அன்னையின் பரிந்துரையால் இன்முகத்துடன் ஏற்கவும் அவர்களின் வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கவும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர்

திருப்பலி
17.09.2025

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

இறையேசுவின் திருக்குலமே, புனித இராபர்ட் பெல்லார்மின் இத்தாலி நாட்டிலுள்ள முந்திபுல்லியானோ பகுதியில் வாழ்ந்த வின்செண்ட் பெல்லார்மின் சிந்தியா செர்வினி பெற்றோருக்கு கி.பி. 1542ம் ஆண்டு அக்டோபர் 4ம் நாள் மகனாகப் பிறந்தார். கல்வியில் சிறந்து விளங்கிய இராபர்ட் பெல்லார்மின் குருவாக விருப்பம் கொண்டு கி.பி. 1560ல் செப்டம்பா 20ம் நாள் இயேசு சபையில் சேர்ந்து குருவானார். பிளான்டசியில் உள்ள லுவைன் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணியினைத் தொடங்கி தப்பறைகளை விமர்சனம் செய்து உண்மையான கருத்துக்களை பகிர்வதில் சிறந்து விளங்கினார்.

அருட்த்தந்தை பெல்லார்மினின் அறிவுத்திறமையும், ஆழுமைத்தன்மையும் அறிந்த திருத்தந்தை 13ம் கிரகோரியார் அருட்தந்தை பெல்லார்மினை உரோமை குருமடத்தின் குருமாணவர்களுக்கு பேராசிரியராக நியமித்தார். குருமாணவர்களை அருட்தந்தை பெல்லார்மின் அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து வழிநடத்தினார். கி.பி. 1597ம் ஆண்டு திருத்தந்தை 8ம் கிளமெண்ட் ஆலோசகராக திறம்பட செயலாற்றிய பெல்லார்மின் 1598ம் ஆண்டு ஆயராகவும், 1588ம் ஆண்டு கர்தினாலாகவும் உயர்த்தப்பட்டார்.

இறைவனின் வெளிப்பாடு திருவிவிலியத்தில் மட்டுமல்ல, விசுவாச மரபில் உள்ளது என்றும் புனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது இறைவனுக்கு அளிக்கும் ஆராதனையல்ல, என்ற திரிதெந்து பொதுச்சங்க முடிவுகளை மக்களிடம் கொண்டு சேர்த்த பெல்லார்மின் கோப்பர் நிக்கஸ் மற்றும் கலிலேயாவின் புவிசார்ந்த கருத்துகளுக்கு திருஅவையின் சார்பாக மறுப்பு தெரிவித்தார். குடியரசின் கொள்கைகள் அனைத்தும் இறைவனிடமிருந்து வருகிறது. அது மக்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. மக்கள் அதைத் தன் தலைவர்களிடம் ஒப்படைக்கிறார்கள் என்று கூறிய பெல்லார்மின் கி.பி. 1621 செப்டம்பர் 17ம் நாள் விண்ணகமடைந்தார்.

கோட்பாடுகள் சார்ந்த சிக்கல்களை அதிகாரத் தன்மையுடன் அணுகி முடிவெடுக்காமல் அது குறித்து விவாதித்த பின்பே முடிவெடுக்க வேண்டுமென்று கூறி, திருஅவையில் உள்ள சிக்கல்களை சரிசெய்த பெல்லார்மின் திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1930ம் ஆண்டு ஜூன் 29ம் நாள் புனிதராக உயர்த்தி திருஅவையின் சட்ட வல்லுநர்களுக்கு பாதுகாவலராக அறிவித்தார்.

தனது இளமைப்பருவத்தில் பல கவிதைகளை எழுதினார். முற்றும் விர்ஜிலின் பல படைப்புகளை மனப்பாடம் செய்ததாக கூறப்படுகிறது. புனித

ராபர்ட் பெல்லார்மின் மேரி மாக்தலீனுக்கு ஒரு பாடலை எழுதினார். அது இப்போது உரோமன் ப்ரீவியரில் சேர்க்கப்பட்டுள்ளது இது ஆயர்கள், குருக்கள் மற்றும் நவசன்னியாசிகளின் அன்றாட பயன்பாட்டிற்கான பிரார்த்தனைகள், பாடல்கள், வாசிப்புகள் மற்றும் சங்கீதங்களைக் கொண்ட ஒரு வழிபாட்டு புத்தகமாக உள்ளது. புனித இராபர்ட் பெல்லார்மினின் திருவிழாவைக் கொண்டாடும் நாம் நமது வாழ்வில் இருக்கும் சிக்கல்களை சரிசெய்து கொள்ள தேவையான மனதிடனை அருளுமாறு இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்களது பணிவாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், தடுமாற்றங்கள் அனைத்திலிருந்தும் அவர்களை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் பரலோகத் தந்தையே, நாட்டையாளும் தலைவர்கள் மக்கள் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழவும் பொருளாதார சமூக சமய சிக்கல்களிலிருந்து மக்களுக்கு நல்லமுறையில் தீர்வுகள் எடுக்கவும் நெருக்கடியான சூழ்நிலையில் சிந்தித்து செயல்படவும் தேவையான அருளைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. உயிரின் ஊற்றே எம் இறைவா, எதிர்பாராத நேரத்தில் நடக்கும் இயற்கைச் சீற்றங்களினால் தங்களின் குடும்பங்கள், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தங்களின் உடமைகளை இழந்து வாடும் மக்களை கண்ணோக்கும், அவர்களுக்கு நீரே தாயும் தந்தையுமாயிருந்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 25வது ஞாயிறு

திருப்பலி 21.09.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *ஆமோ. 8: 4-7* II. *1திமொ. 2: 1-8* *லூக். 16: 1-13*

இறை இயேசுவின் அன்பர்களே, நிலைவாழ்வைத் தேடிப் பொதுக்காலம் ஆண்டின் 25ஆம் ஞாயிறுத் திருவழிப்பாட்டில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவரையும் அன்புடன் வாழ்த்துகிறோம். யாருக்குப்பணிச் செய்வது?, நிறைவாழ்வு அடையத் தேவையான முன்மதி என்ன?, செல்வத்திற்காக விவேகத்துடன் வாழ தெரிந்த நாம், அருள் வாழ்வு வாழ எடுக்கும் முயற்சி என்ன? நம் வாழ்வின் இலக்கு - பணமா? இறைவனா? என்று பல கேள்விகளுக்கு இன்றைய வாசகங்கள் பதில் தேட உதவுகின்றது. வாழ்க்கைக்குப் பணம் தேவை. ஆனால் விவேகமாய்ப் பணம் தேடும்போது நாம் அருள்வாழ்வை இழந்து விடுகிறோம். நாம் எத்தனை காலம் வாழ்ந்தோம்

என்பதை விட எப்படி வாழ்ந்தோம் என்பதே முக்கியம் என்று சொல்ல கேள்விப்பட்டுள்ளோம். நம்மிடம் உள்ளதைப் பகிர்ந்துக் கொள்வதை விட, சொத்துக்களைச் சேர்ப்பது, நம்முடைய குறிக்கோளாக இருந்தால், கடவுள் நமது தலைவர் அல்ல. இந்த உண்மை, நம்மிடம் உள்ளச் சொத்துக்களுக்கும் மட்டுமல்ல, நம்மிடம் உள்ள மற்றத் திறமைகளையும் சேர்த்துத் தான் குறிப்பிடப்படுகிறது. நாம் எல்லாரும், ஏதாவது ஒரு திறமையோடு, ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறோம். நாம் அந்தத் திறமைகளை எப்படி மற்றவர்களுக்காக உபயோகிக்கப் போகிறோம்?

நிரந்தரமற்ற இவ்வுலகப் பொருள்களையும், நிலைவாழ்வுக்குரிய திடமான நம்பிக்கை, ஞானம், அனைத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்துக் கொள்ளும்போது, நமது நம்பகத்தன்மை உறுதிபடுத்தப் படுகிறது. இந்த நாளில் இறைவனுக்குப் பணிசெய்யும் மக்களாக மாறிடப் பொறுப்புள்ள பணியாளராக வாழ்ந்திட இத்திருப்பலிக் கொண்டாடத்தில் இறைவனை மன்றாடுவோம்.. நம்ப தக்கவராய், பெறுப்புள்ள பணியாளராய் வாழ்ந்திடுவோம்...

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எங்கள் மீட்பராகிய இறைவா, வேற்றிடங்களில் வாழும் ஆயிரம் நாள்களிலும் உம் கோவில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது என்ற இறைவாக்குக்கு இணங்கச் செயல்படும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரையும் தீயசக்திகளிடமிருந்து பாதுகாத்து நல்ல உடல் சுகத்தையும் ஆன்மீகப் பலத்தையும் பாதுகாப்பையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. கல்வாரியை நோக்கி வாருங்கள், கல்வாரியைப் பாருங்கள் என்று புனித எஞ்சலினா கூறியதுபோல் நாங்கள் உம் கல்வாரி நோக்கி வரவும், நல்ல கள்வனின் சிலுவையில் மீட்பு பெற்றது போல நாங்களும் மீட்படையவும், சிலுவையை உற்று நோக்கிப் பாவங்களிலிருந்தும், நோயிலிருந்தும் விடுதலை அடையவும் அருள்வரம் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. எங்களுக்காகக் காத்திருக்கும் எம் இறைவா, நாங்கள் உம் ஞானத்தையும், இரக்கத்தையும், உம் அன்பையும் தேடக்கூடியவர்களாய், நிலையற்றச் செல்வத்தை விடுத்து நிலையான உம் இறையரசை நாடவும், நீர் எமக்குக் கொடுத்த திறமைகளைப் பிறருக்காய் பயன்படுத்தவும் அதற்குத் தேவையான ஞானத்தை அருளவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அல்லனவற்றை அழித்து நல்லன செய்யும் இறைவா, நேர்மையானவாழ்வு வாழவும், ஆணவபோக்கை விட்டு விட்டு குழந்தை உள்ளம் கொண்டவராய் வாழவும் அதனால் ஏற்படும் தற்காலிகமான தோல்வியை வென்று நிரந்திரமான வெற்றிப் பெற்றிட உழைப்பையும் உறுதியையும் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்..



அருளாளர் **ஜோசப் கலசான்ஸ்** மற்றும் நண்பர்கள் நினைவு

திருப்பலி
22.09.2025

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் ஸ்பானிஸ் நாட்டு சலேசிய குடும்பத்தை சார்ந்த அருளாளர் ஜோசப் கலாசன்ஸ் மற்றும் அவரோடு 93க்கும் அதிகமான மறைசாட்சிகளின் நினைவினை கொண்டாடுகின்றோம். ஸ்பெயின் நாட்டு போரில், கிறித்துவ துறவிகள், குருக்களை சிறையில் அடைத்து இறை பணியாற்றியதற்காக அவர்களை கொலை செய்தார்கள். அத்தகையோரில் 95 சலேசியத் துறவிகள், 39 குருக்கள், 22 திருப்பணியாளர்கள், 24 அருட்சகோதரர்கள், 2 சலேசிய கன்னியர்கள், 4 சலேசிய உடனுழைப்பாளர்கள் அடங்குவர். அனைவரும் ஏறக்குறைய ஜூலை 1936 முதல் ஏப்ரல் 1938 வரையிலான காலகட்டத்தில் கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தங்களது இன்னுயிரை கிறிஸ்துவுக்காக இழந்தார்கள். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடிகளாகவும் திகழ்ந்தார்கள். இந்த தியாகப்பலியில் பங்கெடுக்க வந்துள்ள நாம் அனைவரும், நம் ஒவ்வொருவருக்காகவும், சலேசியர்களுக்காகவும் சிறப்பான விதத்திலே செபிக்க கடமைப்பட்டுள்ளோம். தொன்போஸ்கோவைப்போல, தொன்போஸ்கோவாக வாழ்ந்த இந்த சலேசிய மறைசாட்களின் முன்மாதிரியினைப் பின்பற்றி வாழ்வதற்கு தேவையான அருட்கொடைகளை நாமும் பெற வேண்டி இத்திருப்பலியில் நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். இவர்கள் இயேசுவின் வழிநடந்து மக்களை இறைவழியில் நடத்திச் செல்லவேண்டிய அருள்வரங்களைப் பெற்று சாட்சிய வாழ்வு வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. ஆண்டவராகிய இயேசுவே, எம் வாழ்க்கையில் நாங்கள் சந்திக்கின்ற அச்சம், அவமானம், கலக்கம், குழப்பம், துயரம், சாவு போன்ற வேளைகளில் நம்பிக்கை இழந்துவிடாமல் உம்மைப் பற்றிக்கொள்ள அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித வின்சென்ட் தே பால்

திருப்பலி
27.09.2025

## முன்னுரை

திருமதி. டிலைலா சேவியர்

அன்பு இறைமக்களே, பிரான்சிஸ் காஸ்கனி நகரில் பிறந்த புனித வின்செனட் தே பால், பிரான்சீஸ்கன் குருக்களின் உதவியால் கல்விகற்று குருவானவர் ஆனார். குருத்துவத்திற்குப் பின் பாரிஸில் பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். தந்தை பெருய்ல் என்பவரின் நட்பினால் இவரது ஆன்மீகம் ஆழமடைந்தது. 40 வயதில் முற்றிலும் இறைவனுடன் ஒன்றியவராக வாழத் தொடங்கினார்.

இவர் முகமதியன் ஒருவனால் ஆப்ரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கே அடிமைச் சந்தையில் இவர் ஆற்றிய பணிகளின் அனுபவம் இவருக்குக் கை கொடுத்து உதவியது. டிகோண்டி குடும்பத்தினரின் விருப்பப்படி அவர்கள் அளித்த நிலம், மானியம் இவைகளைப் பெற்றுக்கொண்டு ஏழைகளுக்கு உதவ முன்வந்தார். "வின்சென்சியன்" என்ற துறவறச் சபையை உருவாக்கினார். இவருடைய சபைத் துறவிகள் ஏழைகள் மற்றும் ஆதரவற்றோரைப் பேணுவதற்காகவே தங்களை அர்ப்பணிக்க வேண்டுமென்று சபை ஒழுங்குகளை அமைத்தார். இந்த வியத்தகுப் பணிகளைப் பார்த்த லூயி தெ மரியாக் என்பவரின் தாராளமான பொருளுதவியுடன் பெண்களுக்கும் ஒரு துறவறச் சபையைத் தோற்றுவித்தார். "பிறரன்பு சகோதரிகள்" என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

இவற்றோடு நின்றுவிடாமல் 3ம் சபை ஒன்றையும் அவர் காலத்தில் தொடங்கினார். இந்தச் சபையினர் ஆழ்ந்த தியாக உணர்வுடன் ஏழை எளியோரின் கண்ணீரை இயேசுவின் பெயரால் துடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அன்றுபோல் இன்றும் திருஅவையின் எல்லாப் பகுதிகளிலும் அன்பையும் இரக்கத்தையும் பரப்புகின்றனர். அன்பே இவரது பிரதான புண்ணியம், ஏழைகளுக்கு உதவி செய்யும்படி செல்வ சீமாட்டிகளிடம் சமூக உணர்வைத் தூண்டினர். அவர்களிடம் பெற்ற உதவியால் மருத்துவமனையை அமைத்துக் கொடுத்தார். பெண்களை இழிவுபடுத்தும் இராணுவத்திடமிருந்து மீட்டு கன்னியர்களின் இருப்பிடங்களில் உறைவிடம் பெற்றுத்தந்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்த நிலங்களையும் விதைகளையும் மற்றும் தேவையானவைகளையும் தந்தார். ஆப்பிரிக்காவில் அடிமைகளாயிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆன்மீக உதவி செய்து, தன்னுடைய சபைக் குருக்கள், கன்னியர்கள் வழியாக அவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்டார். எங்கெல்லாம் இவரது தியாகத்தொண்டு தேவைப்பட்டதோ அங்கெல்லாம் முழுமையாக தன்னை அர்ப்பணித்தார். இப்புனிதரைப்போல ஏழைகளை அன்பு செய்யும் தியாக மனப்பான்மைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும், எங்களின் ஞான மேய்ப்பர்களான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் போன்றவர்களுக்கு எங்களால் ஆன உதவிகள் செய்யவும், இவர்களைச் செபத்தில் தாங்கி நிற்கவும் வேண்டிய நல்மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் நிறைவே இறைவா, உமது மனப்பான்மையை எமதாக்கிக் கொண்டு ஏழைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், விதவைகள், தனிமையில் வாடுவோர், வாழ்வாதாரத்தை இழந்தவர்கள் போன்றவர்களிடம் இரக்கமும், கருணையும் காட்டும் மனப்பக்குவம் உள்ளவர்களாக வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. ஒளியே உருவான இறைவா, பிறர் துன்பம் துடைப்பதில் பங்கெடுக்கும் புனித வின்சென்ட் தே சபை குருக்களும், கன்னியர்களும் ஆன்ம பலமும், உடல் நலமும் பெறவும், தாங்கள் மேற்கொள்ளும் பணிகளை மென்மேலும் சிறப்பாகச் செய்யும் ஆற்றலும் மனஉறுதியும் பெறவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## பொதுக்காலம் 26வது ஞாயிறு

திருப்பலி
28.09.2025

**முன்னுரை**

*திருமதி. டிலைலா சேவியர்*

I. *ஆமோ. 6: 1, 3-7,* II. *1திமொ. 6: 11-16* *லூக். 16: 19-31*

நிறையுள்ளவர்களாக விரும்பினால், நீர் போய் உம் உடமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும், அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்" (மத். 19:21) அன்பான இறைமக்களே, பரிசேயர்கள் பொருளாசைக் கொண்டவர்களாக இருந்தனர், பணத்தை அன்பு செய்தார்கள், இந்த சூழலில் இயேசு அவர்களுக்கு செல்வந்தர், இலாசர் என்ற உவமையை கூறுகிறார்.

செல்வந்தர் தன் கண்முன்னே உணவின்றி துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஏழையை கண்டுக் கொள்ளவில்லை. தன்னிடமுள்ளதை பகிர்ந்துக் கொள்ளவில்லை. தன்னுடைய ஐந்து சகோதரர்களுடன் ஏழை இலாசரையும் தன் சகோதரனாக எண்ணவில்லை. செல்வந்தர் பணக்காரராக இருந்தது தவறில்லை ஆனால் தன்னலமாக இருந்தது தான் அவரது தவறு. யாக்கோபு 4:17 வசனத்தில் ஆதலால் நன்மை செய்ய ஒருவருக்கத் தெரிந்திருந்தும் அதைச் செய்யாமலிருந்தால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

செல்வர்களாக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் அனைவருக்கும் பசியும் உண்டு, இறப்பும் உண்டு இந்த செல்வந்தர் கடவுளை அன்பு செய்வதை

விட பணத்தை அன்பு செய்தார், ஏழைகளுக்கு உதவி செய்ய தவறினார். அன்பானவர்களே புனித பவுல் திமோத்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் கூறுகிறார். (1திமொ. 6:10) பொருள் ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் ஆணிவேர், அந்த ஆசையால் சிலர் நம்பிக்கையினின்று தவறி திரிந்து பல வேதனைகளை தாங்களாகவே தங்கள் மேல் வருவித்துக் கொள்கிறார்கள். செல்வந்தர்களாக இருப்பது தவறில்லை, ஆனால் கடவுள் அவர்களுக்கு கொடுத்த செல்வங்களை பகிர்ந்துக்கொள்வதே இறைவனின் விருப்பம்.

பிறரின் பசியின் துன்பத்தைக் கண்டு மனமிரங்கிய இயேசு அப்பத்தை பகிர்ந்தளித்து பசியை போக்கி, நமக்கு வாழ்ந்து காட்டினார். இறுதியில் எல்லாருக்கும் அப்பமாக மாறினார் ஆண்டவராகிய இயெசு இந்த திவ்விய நற்கருணையாக மாறிய ஆண்டவரை நாம் உட்கொள்ளும்போது நமக்கு ஓர் பொறுப்பு பிறருக்காகக நாம் நொறுக்கப்பட வேண்டும். அப்பமாக மறவேண்டும். நாம நம்முன் காண்கின்ற லாசரில், ஏழைகளில் ஆண்டவரின் முகத்தைக் காண்போம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து லாசரின் உருவில் நம்முன் காத்திருக்கிறார். நாம் அனைவருக்கும் உதவிசெய்பவர்களாக மாறுவோம. விண்ணகத்தை உரிமையாக பெற்றுக்கொள்வேம். பிறருக்கு உதவிசெய்து அவர்களின் துன்பத்தில் ஆறுதலாய் இருக்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்த, ஆயர்கள், குருக்கள் கன்னியர்கள் அனைவரையும், மேலும் நற்செய்தியை அறிவிக்கும் நற்செய்தி மலர்களான மறைபரப்பு பணியாளர்களையும், நல்ல உடல், ஆன்ம நலத்துடன் ஆசீர்வதித்து, இவர்கள் அனைவருக்கும் இறுதிவரை நற்செய்தி பணியை செய்யும் கிருபையை தந்தருள உம்மை மன்றாடுகின்றோம்.
2. இரக்கமே உருவான இறைவா, நீர் எங்களுக்கு கொடுத்துள்ள அனைத்து செல்வங்களுக்கும் நன்றி செலுத்துவதோடு, எங்கள் வீட்டின் வாசல்களில் கணப்படும் இலாசர்கள் மீது மனமிரங்கி அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்திட தேவையான மனதை தந்திட உம்மை மன்றாடுகின்றோம்.
3. படைப்பின் பரம்பொருளே இறைவா, எங்கள் குடும்பங்கள் பணம், செல்வம் என்ற மாயையில் சிக்கிக் கொள்ளாமல், உமது அருளினால் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காக என்றும் நன்றி செலுத்துவதோடு, உம்மை எங்கள் வாழ்வில் முன்னிலைப் படுத்தும் இறைபக்தியையும் நன்றி உள்ளத்தையும் தந்திட உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஞானத்தின் உறைவிடமே இறைவா, நாங்கள் எங்களின் அறிவு ஆற்றலில் சார்ந்து வாழாமல் உம்மையே என்றும் பற்றிக் கொண்டு நற்செய்தி வழியிலும், திருஅவை வழிநடத்துதலிலும் பின்பற்றி வாழும் எளிமையான மனதை தந்தருள உம்மை மன்றாடுகின்றோம்.

# தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் விழா

திருப்பலி
29.09.2025

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

இறைவனின் அதிதூதர்களாகிய மிக்கேல், கபிரியேல், இரபேல் ஆகியோர் வெவ்வேறு விதமான சூழ்நிலைகளில் நமக்குத் தெய்வீகப் பராமரிப்பைப் பெற்றுத்தந்துக் கொண்டே இருக்கிறார்கள். தீமையை எதிர்த்து நாம் மேற்கொள்ளும் போராட்டத்தில் அவர்கள் நம்மோடு நின்று போரிட்டு நம்மைக் காக்கின்றார்கள். இறைவனுடைய ஆற்றலையும் உடனிருப்பையும் நன்மைத் தன்மையும் நமக்குப் பெற்றுத் தருகிறார்கள்.

**மிக்கேல்:** கடவுளுக்கு இணையானவர், தீமையை எதிர்ப்பவர் சாத்தானை தண்டிப்பவர் (திவெ. 12:7)
**கபிரியேல்:** கடவுளின் ஆற்றலையும், இறைவனின் வல்லமையையும் மனிதருக்குத் தெரிவிப்பவர். திருமுழுக்கு யோவானின் தந்தை சக்கரியாவுக்கும் (லூக். 1:1) மரியாவுக்கும் மங்கள வார்த்தை எனும் இறைவாக்குரைத்தவர் (லூக். 1:25)
**இரபேல்:** இறைவன் குணமாக்கினார் என்பது பொருள். பழைய ஏற்பாட்டில் பெரிய தொபியாஸ் பார்வை இல்லாதபோது இவர் புதுமையாகக் குணமாக்கினார். அவரின் மகனுக்கு நீண்ட வழித்துணையாகச் சென்றார். நோயாளிகள், பயணிகளுக்குப் பாதுகாவலராய் உள்ளார் (தோபி. 12:15). இறைத்தூதர்கள் விண்ணுலகைச் சார்ந்தவர்கள் இவர்களும் புனிதர்களே. எனவே இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் கோடான கோடி வானதூதர்கள்போல வாழ்ந்து இறையருள் பெற்றிட இன்றைய திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாமே மனிதரின் ஆற்றலுக்குட்படுவதில்லை மனிதர் இறவாமைப் பெற்றவர் அல்லர் (சீராக் 17:30) என உணர வைத்த இறைவா, விண்ணகத்தில் அதிதூதர் மிக்கேலுக்கும், அரக்கப் பாம்பிற்குமிடையே நடக்கும் போரைப்போல, இவ்வுலகப் போராட்டங்களிலிருந்தும், இடர்பாடுகளிலிருந்தும் உமது பேரருளால் எங்களைக் காத்து இறைச்சித்தப்படி வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. உலகெங்கும் சென்று நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள் என்றுரைத்த இறைவா, கபிரியேல் அதிதூதர்போல், எங்களுக்கும் இறை ஆதரவையும், பாதுகாப்பையும் தந்து நாங்களும் உமது நற்செய்தியைப் பிறருக்கு அளிக்கத் தேவையான ஞானத்தைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள், உங்களைக் காத்திடுவேன் (தி.பா. 50:15) என்ற இறைவா, பழைய ஏற்பாட்டில் தொபியாசை வழிநடத்தி வாழ்வளித்து, குணமாக்கிய அதிதூதர் இரபேல் எங்களையும் தீராத நோய்களிலிருந்து குணமாக்கி, வறுமையிலிருந்து வளமான வாழ்வுக்கு இட்டுச்செல்ல, நேரிய வழியில் நாங்கள் நடந்திடத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## புனித எரோணிமுஸ் (ஜெரோம்) திருவிழா

திருப்பலி
30.09.2025

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் புனித ஜெரோம் அவர்களின் விழாவைக் கொண்டாடுகின்றோம். "விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" என்று சொல்லி, எல்லா மக்களினமும் எளிதில் புரிந்து கொள்ளும் நோக்கத்தில் விவிலியத்தை மொழி பெயர்த்த மாபெரும் புனிதர் இந்த புனித ஜெரோம். ஏறக்குறைய 341ம் ஆண்டில் டால்மேஷியா என்ற இடத்தில் பிறந்தவர் தற்போது இது யூகோஸ்லாவியாவில் இருக்கிறது. 366ம் ஆண்டில் திருமுழுக்கு பெற்றவர், பின்னாளில் 377ல் அந்தியோக்கியாவின் தென்மேற்கில் இருக்கும் சால்சிஸ் பாலைவனத்தில் இரண்டு ஆண்டுகள் துறவியாக வாழ்ந்தவர், அங்கேயே குருத்துவ அருட்பொழி பெற்றவர். விவிலியம், மறையுரைகள் மற்றும் யுசேபியுஸின் படைப்புகளை மொழி பெயர்த்தார். 386களில் கத்தோலிக்க மறையின் கோட்பாடுகள் தாக்கப்பட்டபோது அதனைக் கண்டித்து, எதிர்த்து பல நூல்களும் எழுதினார். கிரேக்கம், எபிரேயம் மொழிகளில் இருந்த திருமறை நூல்களை மக்களுக்குப் புரியும் வகையில் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார். கல்தேய மொழியைக் கற்று அம்மொழியில் எழுதப்பட்ட தோபித்து, தானியேல் நூல்களை மொழிபெயர்த்தார். பழைய ஏற்பாட்டின் சாலமோனின் ஞானம், சபை உரையாளர், பாரூக், 1 மற்றும் 2 மக்கபேயர் ஆகியவை தவிர மற்ற 41 நூல்களையும் 18 ஆண்டுகளில் இலத்தீனில் மொழிபெயர்த்தார். செப்டம்பர் 30, 420ல் மறைந்த இப்புனிதர், இன்று விவிலிய அறிஞர்கள், நூலகங்கள், நூலகப் பணியாளர்கள், பள்ளிக் குழந்தைகள், மாணவர்கள் ஆகியோருக்கு மட்டுமன்று மொழி பெயர்ப்பாளர்களுக்கும் பாதுகாவலர் என திருஅவையால் அறிவிக்கப்பட்டவர். இவரது நற்செய்தி அறிவிப்புப் பணியில் பங்குகொண்டு நாமும் ஏதாவது ஒரு வழியில் நற்செய்தி அறிவிக்கும் கருவியாக வாழ்வதற்குத் தேவையான வரத்திற்காகத் தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம். நம்பிக்கையோடு பங்கெடுப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவாம் இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகளுக்காக மன்றாடுகிறோம்.

நற்செய்சியின் ஒளியில் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தி அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களையும் அவ்வொளிக்கு அழைத்துச் செல்ல வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் ஆழத்தைக் காட்டிய இறைவா, எதிர்பாரா நிகழ்வுகளைத் தாங்கும் உறுதியான நெஞ்சம் கொண்டிருக்கவும், அத்தகைய சூழலில் உணர்ச்சிகளுக்கு இடமளிக்காது கடவுளின்மீது அசைக்க முடியா நம்பிக்கைக் கொண்ட இயேசுவைப் போல அவரின் மனநிலையோடு எமது வாழ்வை அணுகத் தேவையான ஆற்றலால் எங்களை நிரப்பியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இறைவனை நம்பி நாம் செய்கிற எந்தவொரு செயலும் பொய்த்துப் போவதில்லை. அது எப்போதும் நமக்கு வெற்றியே என்பதை உணர்ந்து, எங்களது நம்பிக்கையை ஆழப்படுத்த வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



அருள் மழை பொழியும் ஆரோக்கிய தாயே துன்பப்படுவோரின் துயர் துடைக்கும் தயை மிகு தாயே இதோ அசைக்க முடியாத முழு நம்பிக்கையுடன் உமது திருத்தலத்தில் கூடியுள்ளோம். உமது வல்லமையுள்ள மன்றாட்டினால் எங்களை கரம்பிடித்து வழி நடத்தும் தாயே எல்லாவற்றிற்கும் மேலாக இறை இயேசுவையே அன்பு செய்யவும், அவருக்காகவே வாழவும் எங்களுக்கு துணை செய்வீராக் ஏழைகளையும், ஆதரவற்றவர்களையும் அன்புடன் அரவணைக்கும் அன்னையேஎங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவோடு ஒன்றித்திருக்கின்ற நீர், சக்தி மிக்கவளாய் இருக்கின்றீர் அம்மா நாங்கள் கேட்பதை தட்டாமல் தருகின்ற அன்புத் தாயே துன்ப துயரங்களிலிருந்து எங்களை காப்பாற்றும்.
தீராத வியாதி வருத்தங்களிலிருந்து விடுவித்தருளும். வறுமையில் வாடும் எங்கள் வாழ்வை வளமாக்கும். அமைதியின்றி அலையும் எங்களுக்கு ஆறுதல் தாரும். வாழ்வதற்கு அறியாது வருந்தும் எங்களுக்கு வாழ வழி காட்டும். எங்கள் குடும்பங்களையும், தொழிலையும் ஆசீர்வதித்து பாதுகாத்தருளும் தாயே ஆமென்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# அருள்மிகப் பெற்றவளே வாழ்க

*திரு. புல்லோன் ஜோ லூயிஸ்*

நம் வாழ்வில் ஒவ்வொரு நாளும் பல நண்பர்களையும், உறவினர்களையும் சந்திக்கின்றோம். அப்படி சந்திக்கும்போதும், பிறந்த நாள், மணவிழா போன்ற கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும்போதும், "வாழ்க, வளமுடன் வாழ்க", "வளமுடன் நலமுடன் வாழ்க" என்பன போன்ற வார்த்தைகளால் அவர்களை வாழ்த்துகிறோம். அதுபோல நல்லவர்களையும், ஊருக்கும், உலகுக்கும் அரும்பணியாற்றிய சான்றோர்கள், தியாகிகள், தலைவர்களையும், "வாழ்க" என போற்றுகிறோம், வாழ்த்துகிறோம்.

சக மனிதர்களை வாழ்த்துவது போலல்லாமல், மிகவும் மேலான விதத்தில் கடவுளை நாம் வாழ்த்துகிறோம். அவரை வாழ்த்துவதால் நாம் வாழ்கிறோம், வளருகிறோம். அவரைப்போலவே நாமும் நல்லதையேச் செய்வதற்கான ஆற்றல் பெறுகின்றோம்.

நமது வாழ்த்துதலை அவர் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் அவர் நம்மை நாளும் வாழ்த்துகிறார். ஏனெனில் அவர் வாழும் கடவுள், வாழ்விக்கும் கடவுள். "தோன்றுக" என்று கூறி, அவர் அனைத்து உலகையும், உயிர்களையும் படைத்தார். இறுதியாக அவர் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர்

மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான் (தொநூ 2: 7). இவை "வாழ்க" எனக்கூறி வாழவைக்கும் கடவுளின் செயல்களே. இங்கும் "இதோ கன்னிப்பெண் கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள், அவன் எம்மானுவேல் என்னும் பெயர் பெறுவான்" என்ற எசாயாவின் இறைவாக்கு நிறைவேறும்படியாய், கடவுள்தாமே தம் வானதூதர் வழியாய் சாதாரண ஓர் ஏழைப்பெண் மரியாவுக்கு "அருள்மிகப் பெற்றவளே, வாழ்க" (லூக் 1: 28) என்ற வாழ்த்துச் செய்தியைச் சொல்கிறார்.

மரியாள் உண்மையில் ஒரு ஏழைப்பெண்தான் என்பதை விவிலியம் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. "தாழ்நிலையில்" என அவர் தம்மைக் குறிப்பிடுவதும், அவருக்கும் யோசேப்புக்கும் பெத்லேகேமிலோ, விடுதிகளிலோ இடம் கிடைக்காததும் (லூக் 2: 7), அவர்கள் எருசலேம் கோவிலுக்குச் சென்று குழந்தை இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணித்தபோது ஏழைகளின் காணிக்கையான இரு மாடப்புறாக்களைக் கொடுத்ததும் (லூக் 2: 24) சிறந்தச் சான்றுகளாகின்றன. இந்த ஏழைப் பெண்மணிதான் மனுக்குலம் மீட்படைய ஒரு கருவியாக இறைவனின் கரத்தில் செயல்பட இன்றியமையாதவளாய் அழைக்கப்பட்டாள். இறைவனால் முன் குறிப்பிடப்பட்டவரும் அவரே, மனுக்குலம் அனைத்திற்காகவும் அழைக்கப்பட்டாள். இறைவனுக்குத் தாயாக வேண்டிய மரியாளை, அவள் கருவில் உருவாகும்போதே பாவத்திலிருந்து இறைவன் மீட்டார். அற்பப் பாவத்திற்கும், சாவானப் பாவத்திற்கும் ஆளாகாது, அவளின் கன்னிமைக்கும் பழுதின்றி பராமரித்தார் ஆண்டவர். ஆண்டவரை எந்நேரமும் உணர்ந்திடும், தன் உதரத்தில் அவரைச் சுமந்திடும் பாக்கியம் பெற்றாள். இவ்வுலகில் வாழும் மக்களின் அவலங்களைப் பாவங்களைப் போக்கும் இறைமகனைப் பெற்றெடுக்கும் கருவியானாள்.

அதோ அவள் வாழ்த்துப் பெறுகிறாள். "அருள்மிகப் பெற்றவளே" என்ற அந்த வாழ்த்துதலுக்கு அவள் தகுதியானவளே. "ஏவாள் நமக்கு மரணம் கொண்டு வந்தாள். மரியாள் வாழ்வு தந்தாள்" என்று மரியாளை ஏவாளிடமிருந்து உயர்த்திக் காட்டுகிறார் புனித எபிரேம், புனித புரூனோவும், "ஏவாளைத் தொடர்ந்து இருளும், இடர்பாடும், மரணமும் வந்தன. மரியாளைத் தொடர்ந்து அருளும், ஒளியும், அன்பும், வாழ்வும் வந்தன. மேலும் ஏவாள் அலகையினால் ஆட்கொள்ளப்பட்டாள். மாறாக அலகையை ஆட்டிப்படைத்தவள் கன்னிமரியாள்" என்று மரியாளின் அருளைப் புகழ்ந்து பாடுகிறார். இப்படி "அருள்மிகப் பெற்றவளே வாழ்க" என்று கடவுளால் வாழ்த்து பெற்ற அவளை, இறைவன் தம் பரிபூரண அருளால் நிரப்புகிறார். ஆம், இயேசுவைப் பெற்றெடுத்த தாயாகப் போற்றி மகிமைப்படுத்தப்பட்டார். "நீர் கடவுளின் அருளைக் கண்டடைந்தவர்" (லூக் 1: 31) என்ற வாழ்த்து, மரியாள் கடவுள் அருளால் நிரப்பப்பட்டதற்கு சாட்சி. இந்த அருள்மிகப் பெற்றவள்தான், பாவத்தில் உழன்று, சாவினை நோக்கிப் பயணம் செய்யும் ஒரு சமுதாயத்தின் தாயாக, முதல் பெண்ணாக இருக்கிறாள். இந்தத் தாய் இறைமகன் இயேசுவைக் கருத்தாங்கி, பெற்றெடுத்து, வளர்த்து, ஆளாக்கும் பணியை ஏற்க வானதூதர் "அருள்மிகப்பெற்றவளே வாழ்க" என்று அழைத்ததைத் தொடர்ந்து

"ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்" என்கிறார். "ஆண்டவர் உங்களோடு இருப்பாராக" என்று கத்தோலிக்க திருவழிபாட்டு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றிலும் அருட்பணியாளர்கள் நமக்குக் கூறும் ஆசிமொழி நினைவு கூறத்தக்கது.

அக்காலத்து யூத மக்கள் தங்கள் தொழுகைக்கூட வழிபாட்டில் மட்டும் அல்லாது, அன்றாட வாழ்க்கையிலும் பயன்படுத்திய ஆசியுரை இது. நெடுந்தூரப் பயணத்தை மேற்கொள்ளும்போதோ, முக்கியப் பணிகளைத் தொடங்கும்போதோ, ஒருவருக்கு இத்தகைய ஆசீரைக் கூறினர். இதன்படிதான் கோலியாத்தை எதிர்த்துப் போரிட இளைஞர் தாவீது புறப்பட்டபோது, "சென்று வா" ஆண்டவர் உன்னோடு இருப்பார் (1சாமு 17:37) என ஆசி கூறிதான் அரசர் சவுல் அவரை அனுப்பி வைத்தார். "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் என் சீடராக்குங்கள்" என நற்செய்தி பணியாற்ற தம் சீடர்களுக்கு ஆணையிட்ட உயிர்த்த இயேசுவும், "இதோ உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்" (மத் 18: 19-20) எனும் ஆசிமொழியுடன்தான் அவர்களை அனுப்பி வைத்தார்.

இவ்வாறு இறைவனுடைய ஆசியெனும் வாக்குறுதிகள் அவரால் அழைத்து அனுப்பப்பட்ட அனைவருடைய வாழ்விலும் நிறைவேறின. எனினும் மரியாவிடம் அது எவரிடமும் இல்லாத அளவு சிறப்பாகவும் முழுமையாகவும் நிறைவேறியது என்பதே உண்மை. ஏனெனில் "ஆண்டவர் உம்மோடு" என அவருக்கு அளிக்கப்பட்ட ஆசியும் வாக்குறுதியும் அவளைப் பெண்களுள் ஆசீர்வதிக்கப்பட்டவளாக" உயர்த்தி அவரிடமிருந்தே இறைமகன் பிறந்து மனிதரான மறைநிகழ்ச்சியில் நிறைவேறின. ஆகவே நாம் இறைமகனை ஏற்று வாழ்ந்தால், அவரின் வழிநடத்துதலுக்கு நம்மையே ஆளாக்கினால், எத்தகைய நிறைவையும், உயர்வையும் அடைவோம் என்பதற்கு மரியா ஓர் உன்னத எடுத்துக்காட்டாகத் திகழ்கிறாள்.

அன்புள்ளவர்களே, நாமும் இறைவனால் நிறைவாக அன்பு செய்யப்பட்டவர்கள். அருள் என்னும் அவரது நீங்கா உறவும், உடனிருப்பும் நம் ஒவ்வொருவரிடமும் குறையாமல் உண்டு. "ஏனெனில் அவர் நம் ஒவ்வொருவருக்கும் அருகிலேயே உள்ளார். அவரைச் சார்ந்துதான் நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம், இருக்கின்றோம் (திப. 17: 27-28). சற்று சுய ஆய்வுக்கு நம்மை உட்படுத்துவோமா? இறையருளுக்கும் அதன் அழைப்பிற்கும் ஏற்ப நாம் வாழ்கின்றோமா? பிறரது மனிதத்தை மதிக்கும், காத்து வளர்க்கும் அருளாக நமது உறவும், தொடர்பும், சொல்லும், செயலும், வாழ்வும் அமைந்திருக்கின்றனவா? நமக்கு அரும்பெரும் மாதிரியாக நின்று அழைப்பு விடுக்கிறார் மரியாள். இத்தகு மரியாளை "அருள்மிகப் பெற்றவளே வாழ்க", என்று வாழ்த்திய இறைவனோடு நாமும் சேர்ந்து வாழ்த்துவோம். "அருள் மிகப் பெற்றவளே வாழ்க, வாழ்க", என்று போற்றுவோம்.



ஆசிரியர் தினத்தில் விழாக்காணும்

# புனித அன்னை தெரேசா

டே. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, கத்தோலிக்கத் திருஅவை செப்டம்பர் 5ந்தேதி கொல்கத்தாவின் புனித அன்னை தெரேசாவின் விழாவைச் சிறப்பிக்கின்றது. இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவர் இராதாகிருட்டிணன் நினைவாக, இந்நாளை "ஆசிரியர் தினமாக"வும் நாம் கொண்டாடி மகிழ்கிறோம். மனித மாண்பை மதிக்கக் கற்றுத்தந்த ஆசிரியரான அன்னை தெரேசாவுக்கு இந்த நாளில் விழா கொண்டாடுவது மிகவும் சிறப்பான ஒன்று.

மாசிதோனியா நாட்டின் ஸ்கோப்ஜே நகரில், நிக்கோலா - திரானே தம்பதியரின் மூன்றாவது குழந்தையாக 1910 ஆகஸ்ட் 26ந்தேதி இவர் பிறந்தார். மறுநாளே திருமுழுக்கு வழங்கப்பட்டு, "ஆஞ்சேஸ் கோன்க்சே போஜாக்சியூ" என்ற பெயரும் இவருக்கு சூட்டப்பட்டது. "கோன்க்சே" என்ற அல்பேனிய மொழி வார்த்தைக்கு "ரோஜா மொட்டு" என்று பொருள். 9 வயதில் தமது தந்தையை இழந்த இவர், தாயின் அரவணைப்பில் புனிதமாக வளர்ந்தார். கொல்கத்தாவில் மறைப்பணி செய்த கத்தோலிக்க குருக்கள் பற்றி அறிந்ததும், தாமும் இந்தியாவுக்கு வந்து பணியாற்ற விரும்பினார். 1928 செப்டம்பர் 26ந்தேதி லொரேட்டோ துறவற சபையில் சேர்ந்த இவர், டிசம்பர் மாதம் இந்தியாவுக்குக் கப்பலில் புறப்பட்டார்.

1929 ஜனவரி 6ந்தேதி கொல்கத்தா வந்திறங்கிய ஆஞ்சேஸ், டார்ஜிலிங்கில் உள்ள லொரேட்டோ இல்லத்தில் அருட்சகோதரி ஆவதற்கான பயிற்சியில் சேர்ந்தார். அப்போது, எளிமைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து புனிதரான குழந்தை இயேசுவின் தெரேசா (1873-1897) வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டார். அவரது வாழ்வால் கவரப்பட்ட இவர், 1931 மே 24ந்தேதி அருட்சகோதரியாக முதல் வார்த்தைப்பாடு அளித்தபோது, தமது பெயரை "தெரேசா" என மாற்றிக்கொண்டார். 1937 மே 14ந்தேதி அருட்சகோதரியான இவர், கொல்கொத்தாவில் உள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்ற தொடங்கினார். அங்கிருந்த குடிசைப் பகுதிகளில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலை தெரேசாவை மிகுந்த கவலையில் ஆழ்த்தியது.

1946 செப்டம்பர் 10ந்தேதி டார்ஜிலிங் நோக்கி தொடர்வண்டியில் பயணித்த போது, ஏழைகளுக்குப் பணியாற்ற இறைவன் அழைப்பதை தெரேசா உணர்ந்தார். "மிகச் சிறியோராகிய என் சகோதர சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கேச் செய்தீர்கள்" என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் இவரது உள்ளத்தில் எதிரொலித்துக் கொண்டே இருந்தன. ஏழைகளின் மகிழ்ச்சியில் இறைவனைக் காண நினைத்த தெரேசா, லொரேட்டோ துறவற சபையில் இருந்து வெளியேறினார். 1948 ஆகஸ்ட் 16ந்தேதி வங்காள பெண்களின் உடையான நீல கரையுள்ள வெள்ளை சேலை அணிந்து, வெறும் 5 ரூபாயுடன் மோட்டிஜில் குடிசைப் பகுதியில் தமது சேவையைத் தொடங்கினார்.

ஏழை மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பது, பசியால் வாடுவோருக்கு உணவளிப்பது, கைவிடப்பட்டோருக்கு ஆதரவளிப்பது, இறக்கும் நிலையில் இருப்போருக்கு உதவி செய்வது ஆகியவற்றைத் தமது நோக்கமாகக் கொண்டு தெரேசா பணியாற்றினார். இவர் ஏழை, எளிய மக்களில் இயேசுவைக் கண்டதால், மக்களால் ஒதுக்கப்பட்ட தொழுநோயாளரையும் தொட்டு , அவர்தம் புண்களைக் கழுவி மருந்திட்டார். இவரின் மனித நேயத்தையும், பிறரன்புச் சேவைகளையும் பார்த்தவர்கள், அனுபவித்தவர்கள். "அன்னை தெரசா" என இவரைப் போற்றத் தொடங்கினார். சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மக்களுக்குச் சேவைச் செய்யும் நோக்கத்துடன் அன்னை தெரேசா தொடங்கிய பிறரன்பின் பணியாளர்கள் (மிஷனரீஸ் ஆப் சாரிட்டி) துறவற சபைக்கு, 1950 அக்டோபர் 7ந்தேதி திருத்தந்தை அங்கீகாரம் வழங்கினார். அன்னையின் அன்பு சேவைக்கு, அவரது மாணவிகளான ஆக்னஸ், ஹெர்ட்ரூட் ஆகியோரே முதலில் துணை நின்றார்கள்.

அன்னை தெரேசாவின் தன்னலமற்ற சேவையால் கவரப்பட்ட பலரும், இந்த துறவற சபையில் சேர்ந்து ஏழைகளுக்கும் நோயாளிகளுக்கும் தொண்டு செய்தனர். ஒரு நாள் குப்பைத் தொட்டியில் வீசப்பட்டிருந்த குழந்தையைக் கண்டு மனம் வருந்திய அன்னை, அதை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். உடனடியாக, கைவிடப்பட்ட குழந்தைகளைப் பாதுகாக்க சிசு பவனத்தைத் தொடங்கினார். இப்படி சமூகத்தில் காணப்பட்ட ஒவ்வொரு அவலநிலைக்கும் முடிவுகட்ட விரும்பியதால், அன்னையின் அன்புப்பணி

விரிந்து கொண்டே சென்றது. இதன் காரணமாக, உலகின் பல்வேறு நாடுகளிலும் பிறரன்பின் பணியாளர்கள் சபை வேரூன்றத் தொடங்கியது.

அன்னை தெரேசாவின் பிறரன்பு சேவைக்கு அங்கீகாரம் வழங்கும் விதமாக, அவருக்கு பல்வேறு விருதுகள் கிடைத்தன. 1979ல் அமைதிக்கான நோபல் பரிசும், 1980ல் பாரத ரத்னா விருதும் இவருக்கு மகுடம் சூட்டின. அன்னையின் சேவையால் கவரப்பட்ட அமெரிக்கா, 1985ஆம் ஆண்டு அவருக்கு அந்நாட்டு குடியுரிமை வழங்கி சிறப்பித்தது. 1997ஆம் ஆண்டு அன்னை தெரேசாவின் உடல்நலம் குன்றியபோது, உலகமே அவருக்காகக் கண்ணீர் வடித்தது. 1997செப்டம்பர் 5ந்தேதி இவர் காலமானதும், உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் நேரில் வந்து இறுதி மரியாதைச் செலுத்தினர். அன்னை தெரேசா மறைந்தபோது, அவரது பிறரன்பின் பணியாளர்கள் சபை 123 நாடுகளில் வேரூன்றி இருந்தது. 2016 செப்டம்பர் 4ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அன்னை தெரசாவிற்கு புனிதர் பட்டம் அளித்து சிறப்பித்தார்.

புனித அன்னை தெரேசாவின் வாழ்வில் இருந்து நாம் சிறப்பான மூன்று பாடங்களைக் கற்றுக்கொள்ள முடியும். முதலாவது, கடவுளின் பணிக்காக நம்மை அர்ப்பணித்தால், அவர் நம்மை அவரது கருவியாகவும் சாட்சியாகவும் பயன்படுத்துவார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இரண்டாவது, கடவுளின் விருப்பத்துக்கு நம்மைக் கையளிக்கும்போது, நமக்குத் தேவையான அனைத்தையும் அவரே நம்மிடம் கொண்டுவந்து சேர்ப்பார் என்பதை நாம் உணர வேண்டும். மூன்றாவது, கடவுளின் அழைப்பை நமது வாழ்வில் ஏற்றுச் செயலாற்றினால், உலகோரின் கண்கள் முன்பாக அவர் நம்மை மேன்மைப்படுத்துவார் என்பது உண்மை. ஏட்டுக் கல்வி கற்பிக்கும் ஆசிரியராகத் தமது பணியைத் தொடங்கி, வாழ்வியலையும் மனிதநேயத்தையும் கற்பித்த புனித அன்னை தெரேசாவைப் பின்பற்றி, நாமும் கிறிஸ்துவின் சாட்சிகளாகவும், இந்திய சமூகத்திற்கு எடுத்துக்காட்டான ஆசிரியர்களாகவும் வாழ்வோம்.





# அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரது குழுவினர்

*திரு. ஜான் அலெக்ஸ்*

ஜூலை மாதம் 1936ல் ஸ்பெயின் நாட்டில் தேசியவாதிகளுக்கும் கம்யூனிச பிரிவினருக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்தது (1936-1939). தொடக்கத்தில் திருஅவைக்கு எதிராக மத வெறி கொண்ட போரில் பல்வேறு கிறித்துவ ஆலயங்கள், குருமடங்கள், கன்னியர் இல்லங்களுக்குப் பல தாக்குதல்களைக் கொடுத்தனர். இதில் புனிதர்களின் திருப்பண்டங்கள் சில அழிக்கப்பட்டன. திருஅவையின் பல்வேறு அடையாளங்கள் அழித்து இறைமக்களின் வழிபாடுகளையும் ரத்து செய்தனர். ஆயிரக்கணக்கான திருப்பணியாளர்கள், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொது நிலையினர் ஆகியோர் படுகொலைச் செய்யப்பட்டனர்.

நம் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல், 2000ல் மாபெரும் யூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு, 20ம் நூற்றாண்டின் கிறித்துவ மறைசாட்சிகளின் விபரங்களைச் சேகரித்தார். மார்ச் 2000ல் உரோமை கோலோசியத்தில் நடத்தப்பட்ட திருவழிபாட்டில் ஸ்பெயினின் மறைமாவட்டங்களும் காலந்து கொண்டன.

சுமார் 10000க்கும் மேலான ஸ்பெயின் நாட்டு கிறிஸ்தவர்கள் மறைசாட்சிகளாய் கொல்லப்பட்டனர். ஸ்பானிஸ் திருஅவையை உளுக்கிய இச்சம்பவத்தில் தொன் போஸ்கோவின் சலேசியர்களுக்கும், சலேசிய கன்னியர்களுக்கும் இது ஒரு பேரிடியாக அமைந்தது. அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டவர்களில் 93 பேர் சலேசியக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்பதில் சிறிது மகிழ்ச்சி என்றாலும் சொல்லொன்னா துயரில் அவர்கள் தங்கள் இன்னுயிரைத் தியாகம் செய்ததை பார்க்கும்போது நம்மையும் அறியாமல் கண்களில் நீர் ததும்பத்தான் செய்கிறது.

### வாலென்சியாவின் குழுவினர்

ஜூலை 21, 1936ல் 11 மறைசாட்சிகளைக் கண்டது வாலென்சியா. இரவு முழுமைக்கும் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டில் உருக்குலைந்து போனது வாலென்சியாவின் சலேசிய இல்லம். அச்சமயம் சலேசிய மாநிலத் தலைவர் அருட்பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்கள் தியானத்தில் கலந்து கொண்டிருந்தார். இவர் 1886ல் தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியராவார். இந்த இல்லத்தில் இருந்த அனைத்து சலேசியர்களையும் துப்பாக்கி முனையில் ஒன்றாக நிற்கவைத்தனர் கலவரக்காரர்கள். அதில் ஒருவன் "ஏன் அவர்களைச் சுடவில்லை. எல்லோரையும் கொல்லவே இங்கு வந்தோம் என்பது தெரியாதா உங்களுக்கு"? என்றான். பிறகு அனைவரையும் ஒரு சிறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர்கள் 29ம் தேதி வரை கைதிகளாக வைக்கப்பட்டனர். அதன்பின் எதிர்பாராத வகையில் அனைவரையும் விடுதலைச் செய்தார்கள். மறைசாட்சியாக கொல்லப்படுவதற்கு முன் இடைப்பட்ட காலங்களில் ஒவ்வொருவருக்கும் நிகழ்ந்த ஒரு தனிப்பட்ட கதை உண்டு.

### குழுத் தலைமையாக்கப்பட்ட பணி. ஜோசப் கலசான்ஸ்

மறைசாட்சிகளான இவர்களது குழுவிற்குத் தலைமையாக்கப்பட்டவர் பணி. கலசான்ஸ், ஏனென்றால் 249 சலேசியர்கள், 14 சலேசிய இல்லங்களைக் கொண்ட தராக்கோனென்ஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றிக் கொண்டிருந்தார் அவர். நவம்பர் 1872ல் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர் பணி. ஜோசப் கலசான்ஸ். பின்னாளில் யாருமின்றி அனாதையாகச் சுற்றி வந்தபோது, பார்சிலோனாவில் ஒரு வீட்டில் பணியாளாக வேலைப்பார்த்து வந்த தனது தூரத்து சகோதரியின் பாதுகாப்பில் வளர்ந்தார். இந்த சகோதரியின் மூலமே அவரின் கல்விச் செலவுகள், கல்லூரிக்கு அனுப்பியது எல்லாமே நிகழ்ந்தன. இங்கு தான் 1886ல், தொன் போஸ்கோவை நேரில் சந்திக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. இந்நிகழ்வு அவரது எண்ணங்களில் முத்தாய்ப்பாய் பதிந்த ஒன்றானது. செப்டம்பர் 1889ல் சலேசிய சபையில் சேர்ந்து, அருளாளர் பிலிப் ரினால்டி அடிகளாரிடமிருந்து தன் முதல் துறவற ஆடையைப் பெற்றார். செப்டம்பர் 1890ல் நித்திய வார்த்தைப்பாட்டுக்குப் பின் 1895ல் சலேசிய குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த முதல் சலேசிய குரு என்ற பெருமைக்குரியவர். தன் சலேசிய பணியோடு சேர்ந்து திருப்பணியையும் 20 ஆண்டுகள் திறம்பட செய்ததால் 1916ல் க்யூபா நாட்டிற்கு சிறப்புப்

பணிக்காக அவர் அனுப்பப்பட்டார். ஆறு ஆண்டுகளுக்கு பின் பெரு மற்றும் பொலிவியா சலேசிய மாநிலங்களின் தலைமைத் தந்தையாக பணியமர்த்தப்பட்டார். அதன்பின் 1925ல் மீண்டும் ஸ்பெயினுக்குத் திரும்பப் பெறப்பட்டு, தராக்கோனெனஸ் சலேசிய மாநிலத்தின் தலைமைத் தந்தையாகப் பணியாற்றினார்.

கனிவன்புடன் பழகும் குணமுடையவர் அருட்பணி. கலசான்ஸ் அனைவராலும் போற்றப்பட்டு அன்பு செய்யப்பட்டவர். அவரின் நிர்வாகத்திறமை மற்றும் உடனிருத்தலின் தன்மை அனைத்தும் அவருக்கென ஒரு பாணியை மக்களிடத்தில் உருவாக்கியன. தந்தைக்குரிய பாசத்தினால் அவரை எல்லோரும் "இன்னொரு தொன் போஸ்கோ"வாகவே கண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜூலை 21, 1936ல் வெலென்சியா சலேசிய மாநிலத்தில், அங்குள்ள சலேசியர்களுக்கு தியானம் வழங்கிக் கொண்டிருந்தார் பணி. ஜோசப். அப்போது அவர் அதன் மாநிலத் தலைமைத் தந்தையும் ஆவார். அங்கு வந்த கலகக்காரர்கள் அவரையும் அங்கிருந்த சலேசியர்கள் அனைவரையும் அழைத்துக்கொண்டு சிறையில் அடைத்தனர். ஒரு வாரத்திற்குப் பின் அனைவரையும் விடுவித்தார்கள்.

ஆனால் மீண்டும் ஜூலை 29, 1936ல் பணி. ஜோசப் கலசான்ஸ் மற்றும் அவரோடு இரண்டு வேறு சலேசியர்களையும் கைது செய்து போராட்டக்காரர்களின் தலைமையிடத்திற்குக் கொண்டு சென்றார்கள். பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் பையில் வைத்திருந்த அங்கியைப் பார்த்த ஒருவன், "இவன் ஒரு குருவானவன், இவனைக் கொல்ல வேண்டும்" என்றான். இதற்கு முன் தான் ஒரு சலேசிய குரு என்று அவர்களிடம் அருளாளர் ஜோசப் கலசான்ஸ் சொல்லியிருந்தது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அனைவரையும் ஒரு வாகனத்தில் வலுக்கட்டாயமாக ஏற்றி வெலென்சியாவில் உள்ள சிறைக்கு கொண்டு சென்றார்கள். வழியிலேயே ஒருவன் பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களின் முகத்துக்கு நேராக துப்பாக்கியை வைத்து சுட்டான். "என் தேவனே" என்றபடியே பணி. ஜோசப் இரத்த வெள்ளத்தில் விழுந்து மடிந்தார்.

கிறிஸ்துவின்மீது கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையின் பேரிலும் இறைப்பணி செய்ததன் மூலமாகவும் தனது இன்னுயிரைக் கிறிஸ்துவுக்காக ஈந்தார். சலேசிய அழைப்பின் முன்மாதிரியாகவும், கடவுளிடம் கொண்ட முழு நம்பிக்கையினால் கொலைக்காரர்களை மன்னித்தலில் முன்னோடியாகவும் திகழ்ந்தவர் அருளாளர். ஜோசப் கலசான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அச்சிறப்புக்குரியவரை சலேசியர்கள் செப்டம்பர் 22ம் நாளில் நன்றியோடும் பாசத்தோடும் நினைவு கூறுகிறார்கள். திருஅவை பணி. ஜோசப் கலசான்ஸ் அவர்களை மார்ச் 11, 2001ல் அருளாளர் நிலைக்கு உயர்த்தி மற்றவர்களை 28 அக்டோபர் 2007ல் அருளாளர்களாக அறிவித்தது.



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*




## இரக்கத்தின் தூதர்கள் நடத்திய ஒப்புரவு அருளடையாளப் பயிற்சிப் பாசறை

அறிவிப்புக்கான திருப்பேராயம், உரோமை - உலகில் நற்செய்தி அறிவிப்பு பற்றி அக்கறைக்கான பிரிவு, பாப்பிறை மறைப்பணி கழகங்கள் - இந்தியா, மதுரை உயர்மறைமாவட்ட இரக்கத்தின் தூதர்கள் ஆகியோர் இணைந்து யூபிலி 2025-ஐ முன்னிட்டு அருள்பணியாளர்களுக்காக மேற்கூறிய பயிற்சிப் பாசறை மதுரையில் நடத்தினார்கள். நிகழ்வுக்குத் தலைமை ஏற்ற மதுரை உயர்மறைமாவட்ட பேராயர் மேதகு முனைவர் அந்தோனிசாமி சவரிமுத்து அவர்கள், "ஒவ்வோர் அருள்பணியாளரும் இறைவனின் இரக்கத்தின் அடையாளங்களாகத் தங்கள் பணித்தளங்களில் திகழ வேண்டும். அதே வேளையில் திருஅவையின் சட்டத்திற்கு உட்பட்டு அருளடையாளத்தைக் கொண்டாட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



## புலம்பெயர்ந்த பாப்புவா நியு கினி மக்களுக்கு உதவும் கத்தோலிக்க ஆணையம்

பாப்புவா நியு கினி நாட்டில் வாழும் புலம்பெயர்ந்தோர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு போதுமான ஆதரவையும் உதவியையும் வழங்குவதற்காகவும், அவர்களின் பலம் மற்றும் பலவீனங்களை அடையாளம் காண்பதற்காகவும் பல செயல்திட்டங்களைச் செய்துள்ளது பன்னாட்டு கத்தோலிக்க புலம்பெயர்ந்தோர் ஆணையம்.

பாப்புவா நியூ கினியில் வாழும் புலம்பெயர்ந்தோர் மற்றும் நாட்டில் வாழும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு உதவுவதில் அங்குள்ள கத்தோலிக்கர்கள் அர்ப்பணிப்பு மனநிலையுடன் வாழ்ந்து வருகின்றனர் என்றும், தீவின் பல்வேறு பகுதிகளில் உள்ள உள்ளூர் அதிகாரிகளுடன் இணைந்து மக்களுக்குத் தேவையான பல வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளது பீதேஸ் என்னும் கத்தோலிக்க செய்தி நிறுவனம்.

## ஹெய்ட்டியின் அமைதிக்கான முயற்சிகளை ஆதரிக்கும் திருஅவை



ஹெய்ட்டி நாட்டில் கடுமையான பாதுகாப்பு மற்றும் நிறுவன நெருக்கடியை தீர்ப்பதற்கான முயற்சிகளை திருப்பீடம் வரவேற்கிறது என்று அமெரிக்க நாடுகள் அமைப்பு கூட்டத்தில் உரையாற்றிய அமெரிக்க நாடுகள் அமைப்பிற்கான திருஅவையின் நிரந்தர கண்காணிப்பாளர் பேரருள்திரு. Juan Antonio Cruz Serrano தெரிவித்துள்ளார். கொலை, வன்முறை, மனிதக் கடத்தல், கட்டாய நாடுகடத்தல், போன்ற தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகும் ஹெய்ட்டி மக்களின் அமைதிக்காகவும், பிணையக் கைதிகளை விடுவிக்கவும் திருத்தந்தை லியோ அவர்கள் விடுத்த வேண்டுகோளையும் அக்கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். ஹெய்ட்டி மக்களுக்கான அமைதி மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு திருப்பீடம் தனது இடையறாத ஆதரவை மீண்டும் உறுதி செய்வதாகக் கூறியவர், திருப்பீடம் ஹெய்ட்டி மக்களுடன் தனது உடனிருப்பையும் வலியுறுத்துகிறது என்றும் உரைத்துள்ளார்.




## இம்மாதம் புனிதராக உயர்த்தப்பட உள்ள அருள்சகோதரி மரியா துரொன்காத்தி

2012-ஆம் ஆண்டு திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களால் அருளாளராக அறிவிக்கப்பட்ட சலேசிய சபை அருள்சகோதரி மரியா துரொன்காத்தி அவர்கள், தோட்டாவால் காயமடைந்த ஒரு பழங்குடித் தலைவரின் மகளை தனது எளிய கையடக்கக் கத்தியைப் பயன்படுத்தி காப்பாற்றியதால் மக்களின் நம்பிக்கையைப் பெற்றார். 44 ஆண்டுகளாக, சகோதரி மரியா பழங்குடி மக்களுக்கு கடவுளின் வார்த்தையை அறிவித்ததோடு, அவர்களுக்கு ஒரு செவிலியர், அறுவை சிகிச்சை நிபுணர், எலும்பியல் நிபுணர், பல் மருத்துவர் மற்றும் மருந்தாளுநராகவும் பணியாற்றினார். 1969 ஆகஸ்ட் 25, அன்று, குயிட்டோவிற்கு சென்ற அவர், விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விபத்துக்குள்ளாக அவ்விபத்தில் இறந்தார், தற்போது புனிதராக அறிவிக்கப்பட இருக்கின்றார்.

# சுடர் வாசகர் போட்டி 125

## சரியான விடைகள்

1. துறவற பயிற்சியாளர் தொன் பர்பேரிஸ்
2. அன்னை மரியாள்
3. மேலுலகு சார்ந்தவற்றை நாடவேண்டும் என்பதைக் குறிக்கிறது
4. தலைவர்களுக்கு.
5. லிபேரியுசிடம்
6. எபிரேயர் 12:12
7. 11ம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் ஹெர்மான்
8. அருளாளர் மரிய ட்ரொங்காட்டி
9. தனது 32ம் வயதில்
10. தனது 56வது வயதில் கி.பி. 387 ஆகஸ்ட் 27ம் நாள்
11. திருமுழுக்கு யோவான்
12. அருளாளர் மரிய ட்ரொங்காட்டி
13. கி.பி 4-ம் நூற்றாண்டிலிருந்து
14. கருணை மற்றும் அமைதியின் தூதுவனாக
15. புனித அகுஸ்தினாா



## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திருமதி சந்தோஷ மேரி, கோவை
2. லூர்துசாமி, பெங்களூரு
3. எட்வின் மேரி, விழுப்புரம்

# சுடர்
## வாசகர் போட்டி
## 126

1. அன்னை மரியாவின் இதயத்தில் குத்தப்பட்டிருக்கும் 7 வாள்கள் எதைக் குறிக்கின்றது?
2. தொன் போஸ்கோவை நேரில் சந்தித்த முதல் ஸ்பானிஷ் சலேசியர் யார்?
3. கொல்கொத்தா நகர் புனித அன்னை தெரேசாவின் பெற்றோர் யார்?
4. "விவிலியத்தை அறியாதவன் கிறிஸ்துவை அறியாதவன்" கூறியது யார்?
5. "பிறரன்பு சகோதரிகள் சபை" யாருக்கு யாரால் நிறுவப்பட்டது?
6. இயேசுவின் திருச்சிலுவையைக் எங்கு யார் கண்டுபிடித்தது?
7. தொடக்க நூலில் மரியாவைப் பற்றி முன்குறிக்கும் வசனம் என்ன?
8. புனித பெரிய கிரகோரி எந்த சபை துறவி?
9. "இவன் ஒரு குருவானவன், இவனைக் கொல்ல வேண்டும்" யாரை பார்த்து கூறிய வார்த்தைகள்?
10. புனித அன்னை தெரேசா பெற்ற உயரிய பரிசு மற்றும் விருது என்ன?
11. பெயர்ப்பாளர்களுக்கும் பாதுகாவலர் என திருஅவை யாரை அழைக்கின்றது?
12. "இறைவன் குணமாக்கினார்" என்பது எந்த வானதூதர் பெயரின் பொருள்?
13. திருஅவையின் சட்ட வல்லுநர்களுக்கு பாதுகாவலர் யார்?
14. "கிறிஸ்சோஸ்தோம்" என்பதன் பொருள் என்ன?
15. 1979ஆம் ஆண்டு உலக அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றவர் யார்?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**

தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிக்காட்டி

குழந்தை இயேசுவின் புனித தெரேசா
காவல் தூதர்கள் விழா
புனித பிரான்சிஸ் அசிசி
பொதுக்காலம் 27ம் ஞாயிறு
செபமாலை அன்னை விழா
பொதுக்காலம் 28ம் ஞாயிறு
அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரியா தக்கோஸ்தா
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
புனித லூக்கா திருத்தூதர்
பொதுக்காலம் 29ம் ஞாயிறு
புனித அலோசியஸ் குவனெல்லா
பொதுக்காலம் 30ம் ஞாயிறு
திருத்தூதர்கள் சிமியோன், யூதா
அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

இறைவன் தந்த வானத்தூதர்கள்
அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரியா தக்கோஸ்தா
அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்
அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
திருஅவைச் செய்திகள்

**அன்பு நிறைந்த வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப். 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# செப்டம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | தி | | 1தெச 4: 13-17 | லூக். 4: 16-30 |
| 02 | பு | | 1தெச 5: 1-6, 9-11 | லூக். 4: 31-37 |
| 03 | செ | புனித பெரிய கிரகோரி | கொலோ 1: 1-8 | லூக். 4: 38-44 |
| 04 | வி | | கொலோ. 1: 9-14 | லூக். 5: 1-11 |
| 05 | வெ | கொல்கொத்தா நகர் புனித தெரசா | கொலோ. 1: 15-20 | லூக். 5: 33-39 |
| 06 | ச | | கொலோ. 1: 21-23 | லூக். 6: 1-5 |
| **07** | **ஞா** | **பொதுக்காலம் 23வது ஞாயிறு** | I. **சாஞா. 9: 13-18**<br>II. **பில. 9-10, 12-17** | **லூக். 14: 25-33** |
| 08 | தி | தூய கன்னிமரியாவின் பிறப்பு | மீக்கா 5: 2-5 | மத்.1: 1-16, 18-23 |
| 09 | செ | | பிலி. 2: 6-11 | லூக். 6: 43-49 |
| 10 | பு | | கொலோ. 3: 1-11 | லூக். 6: 20-26 |
| 11 | வி | | கொலோ. 3: 12-17 | லூக். 6: 27-38 |
| 12 | வெ | | 1திமொ. 1:1-2, 12-14 | லூக். 6: 39-42 |
| 13 | ச | புனித யோவான் கிறிசோஸ்தோம் | 1திமொ. 1: 15-17 | லூக். 6: 43-49 |
| 14 | ஞா | திருச்சிலுவையின் மாட்சி | I. எண். 21: 4-9<br>II. பிலி. 2: 6-11 | யோவா. 3: 13-17 |
| 15 | தி | தூய மரியாவின் துயரங்கள் (வியாகுல அன்னை) | 1திமொ. 2: 1-8 | யோவா. 19: 25-27 |
| 16 | செ | | 1திமொ. 3: 1-13 | லூக். 7: 11-17 |
| 17 | பு | புனித இராபர்ட் பெல்லார்மின் ஆயர் | 1திமொ. 3: 14-16 | லூக். 7: 31-35 |
| 18 | வி | | 1திமொ. 4: 12-16 | லூக். 7: 36-50 |
| 19 | வெ | | 1திமொ. 6: 2-12 | லூக். 8: 1-3 |
| 20 | ச | | 1திமொ. 6: 13-16 | லூக். 8: 4-15 |
| 21 | ஞா | **பொதுக்காலம் 25ம் ஞாயிறு** | I. ஆமோ. 8: 4-7<br>II.1திமொ. 2: 1-8 | லூக். 16: 1-13 |
| 22 | தி | அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் நண்பர்கள் நினைவு | எஸ்ரா 1: 1-6 | லூக். 8: 16-18 |
| 23 | செ | | எஸ்ரா 6: 7-8, 12, 14-20 | லூக். 8: 19-21 |
| 24 | பு | | எஸ்ரா 9: 5-9 | லூக். 9: 1-6 |
| 25 | வி | | ஆகாய் 1: 1-8 | லூக். 9: 7-9 |
| 26 | வெ | | ஆகாய் 2: 1-9 | லூக். 9: 18-22 |
| 27 | ச | புனித வின்செண்ட் தே பால் | செக். 2: 1-5,10-11 | லூக். 9: 43-45 |
| 28 | ஞா | **பொதுக்காலம் 26ம் ஞாயிறு** | I. ஆமோஸ் 6: 1, 3-7<br>II. 1திமொ. 6: 11-16 | லூக். 16: 19-31 |
| 29 | தி | தூய மிக்கேல், கபிரியேல், இரபேல் அதிதூதர்கள் விழா | தானி. 7: 9-10, 13-14 | யோவா 1: 47-51 |
| 30 | செ | புனித எரோணிமுஸ் (ஜெரோம்) திருவிழா | செக். 8: 20-23 | லூக். 9: 51-56 |

**தீபகம்** தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
நடத்தும்

# மாநில அளவிலான மாபெரும்
# திருவிவிலிய விநாடி-வினா போட்டி

**விரைவில்..**

பள்ளிகள், பங்குகளுக்கிடையே
குழுக்கள் வாரியாக
பிரித்து நடத்தப்படுகிறது

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள :

**தீபகம் +91 93 85 201 453**

**விவிலியம் அறிவோம் - வீதி எங்கும் எடுத்துரைப்போம்**

**சிறார்களின்
திருவிருந்துக்கான
மறைக்கல்வி**

Catechism for First Holy Com




**இப்போது
விற்பனையில்**




**சிறார்களின்
உறுதிப்பூசுதலுக்கான
மறைக்கல்வி**

Catechism for
Sacrament of Confirmation

+91 9385201453 **deepagamdonbosco**

# மாபெரும் விவிலியக் கண்காட்சி

*விவிலியம் அறிவோம்! இயேசுவை அறிவோம் !!*







பங்கு மக்களும், மாணவ மாணவியரும் திருவிவிலியத்தைப் பற்றி எளிதாக அறிந்துக் கொள்ள விவிலிய நிகழ்ச்சிகளை படங்களாகவும், செய்திகளாகவும், விளையாட்டுகளாகவும், வீடியோ காட்சிகள், பொம்மலாட்டம் வழியாகவும், எடுத்தியம்பும் சிறந்த கண்காட்சி.

**இந்த கண்காட்சியை பங்குகளிலும், பள்ளிகளிலும் அமைத்து விவிலிய அறிவையும் விசுவாசத்தையும் வளர்க்க உதவிடுவோம்.**

*மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி*

**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.

+91 9385201453 **Deepagam Don Bosco**

# வாசகர்கள் கவனத்திற்கு




## அன்புள்ள சந்தாதாரர்களே,

மாதந்தோறும் அச்சிடப்பட்டு
உங்கள் கைகளில் தவழ்ந்த
தீபகச் சுடர் மாத இதழ் இம்மாதம் முதல்
இணையதளத்தில் இ-புத்தகமாக மட்டுமே
வெளியிடப்படுகிறது
என்பதை நீங்கள் அறிவீர்கள்.

எனவே உங்கள் வாட்சப் எண்ணை
எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்து
வழக்கம்போல "சுடர்" மாத இதழை
இனி PDF தரத்தில் பெற்றுக்கொள்ள
அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

+91 9385201453

*தயாரிப்பு* : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
*கணினியேற்றம்* : **கபிரியேல் மேரி** *வடிவமைப்பு* : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
*தயாரிப்பில் மேற்பார்வை* : **சாண்டோ, ஈசாக்** *அச்சிட்டோர்* : **சிகா அச்சகம்,** *கீழ்ப்பாக்கம், சென்னை - 10*